FREE ISSUE

# global express®

*we strive for your success!*

அக்ஷய திருதியை
சிறப்பு சஞ்சிகை - 2012



நந்தன புதுவருடச் சிறப்பிதழ்
2012

Gift Coupon inside

Mar/Apr
2012
Volume 02
issue 09

இலவசமானது! தரமானது! வாசிக்க இனிமையானது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SriLanka
Colombo - Jaffna - Mannar - Vavuniya - Batticaloa - Trincomalee - Kandy | Overseas
Australia - Canada - France - Germany - India - Singapore - Swi




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

global express
we strive for your success!

#48/3 B, 1/1, Dharmarama Road,
Colombo-06, Srilanka.
T: +94 11 2 556 774-7 Fax: +94 11 2 556 773
E: info@globalexps.com
Web: www.globalexps.com

Chief Coordinator
Rajeiv raan

Editorial Team
T.Velu
M.Gowri
S.Yaalini

Production
Creative & Layout Designing Team
Global Express
S.Niraa
K.Dine

Marketing
R.Chenthu
A.Mithula
N.Karan

Distributors
Sangeetha Mobile Link (Jaffna)
Aum Saravanabava illam (Mannar)
KPK Book Centre (Vavuniya)
Manis Café (Trinco)
Nishils Hair & Beauty Salon (Batticaloa)
Sri Lanka Traders (Kandy)
Hanifa Hotel (Kalmunai)

# CONTENT

| | |
|---|---|
| Contents | Page - 01 |
| Monthly Specials | Page - 02 |
| Spiritual | Page - 06 |
| Marabin Suwadugal | Page - 12 |
| Foods / Jokes | Page - 17 |
| Story | Page - 26 |
| Puthiya Vidiyal | Page - 28 |
| Peaks | Page - 30 |
| Arts | Page - 34 |
| XPress Cinema | Page - 38 |
| General Knowledge | Page - 43 |
| Youth Achievements | Page - 44 |
| Kids Korner | Page - 46 |
| Sports | Page - 48 |
| Kavithai | Page - 50 |
| Panimoottam | Page - 52 |
| Global Page | Page - 59 |
| Bimbangal | Page - 62 |

Visit to Our Magazine :
Web : www.globalexps.com
Facebook: globalexpsmag@gmail.com

Visit to Our Websites:
www.jothidaveenai.com, www.tamiltaste.com, www.vettrinews.lk



Page - 02



Page - 04



Page - 14



Page - 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டு



சித்திரைத் திங்கள்!

சித்திரைத் திங்கள் அனைவரும் வரவேற்கும் பொன்னான நாள். சித்திரையில் வரும் பௌர்ணமி சித்ரா பௌர்ணமி என்று தமிழர்களால் தொன்று தொட்டுச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாட்டில் சித்திரைத் திங்களில்தான் எல்லாப் பெரிய கோயில்களிலும் 12 நாட்களுக்குச் சித்திரைத் திருவிழா கொண்டாடப்படுகிறது. புகழ்பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரைத் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. இதேபோல் சங்கரன்கோயில் திருவிழாவும் மிகச் சிறப்பானது.

சித்திரா பௌர்ணமி, எமதர்மராஜனின் கணக்கரான சித்திர குப்தரின் பிரீதிக்காகக் கொண்டாடப்படுகிறது. சித்திரகுப்தனைத் திருப்தி செய்ய விரதம் இருந்து வழிபடுவது நம்முடைய வழக்கம். விரதம் அனுஷ்டிக்கும் நாட்களில் பசும் பால், மோர் உண்ணக் கூடாது. ஆனால், எருமைப் பால் சாப்பிடலாம் அதில் உப்பு சேர்க்கக் கூடாது.

பயத்தம் பருப்பும், எருமைப் பாலும் சேர்த்துப் பாயசம் செய்து நிவேதனம் செய்வது மிகச் சிறப்பாகும். பூஜையை முடித்துவிட்டு சித்திரகுப்தரை பயபக்தியுடன் தரிசிக்க வேண்டும்.

சித்திரை மாதம் வரும் அமாவாசையும், கிருத்திகையும் கூட பண்டிகைகளாகக் கொண்டாடப்படுகின்றன. இம்மாதத்தில் தான் புண்ணிய புருஷர் ஆதிசங்கரர் அவதரித்த திருநாள் வருகிறது. சந்தோஷம் பொங்கும் இந்தச் சித்திரை மாதத்தில் இராமானுஜர் ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. ஆதிசங்கரர் அவதரித்தது பஞ்சமி திதி. இராமானுஜர் அவதரித்தது திருவாதிரை நட்சத்திரத்தில். சில ஆண்டுகளில் இருவரது ஜெயந்தியும் ஒரே நாளில் வருவதும் உண்டு.

சித்திரை வருடப்பிறப்பு கேரள மக்களால் 'விஷீ' என்றழைக்கப்படுகிறது. விஷீவுக்கு முதல் நாள் ஓலை வேய்ந்த வீடுகளில் பழைய ஓலைகளை நீக்கிப் புது ஓலை வேய்வார்கள். மற்ற வீடுகளில் வர்ணம் பூசுவர். வீடுகளைப் பல விதங்களிலும் அலங்கரிப்பார்கள்.

விஷீவுக்கு முதல் நாள் இரவில் ஒரு பெரிய தட்டில் அரிசியை பரப்பி அதில் நவதானியங்கள், பொன் நகைகள், புத்தகங்கள், உடைத்த தேங்காய்கள், கொன்றை மலர், வெள்ளரிக்காய், மாவடுக் கொத்து, தின்பண்டங்கள் ஆகியவற்றை அழகாய் அடுக்கி படுக்கையறையில் வைத்து விடுவர்.
விஷு நாளில் பொழுது விடியும் முன்பாக விழி திறவாமல், முதல் நாள் வைத்த தட்டை கண்டுவிட்டு பிறகு மற்ற பொருட்களைக் காண்பர். இதனை 'விஷுக்கனி காணுதல்' என்பார்கள். மலரும் புத்தாண்டில் விழிகளைத் திறந்ததும் சுபமான பொருட்களைக் காண்பதால் நம் ஆக்கபூர்வமான கனவுகள் நனவாகும் என்று நம்புகின்றனர். இவ்விதம் விஷுக்கனி காண்பதை “மங்களத்திண்ட பிரீதி” என்றழைக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அட்க்ஷய திருதியை

## விரதம் இருப்பது எப்படி



குசேலன். இந்தப் பெயரைச் சொன்னதும் வறுமையில் வாடும் ஓர் ஏழையின் உருவம் உங்கள் நினைவில் வருகிறதா? அதை உடனே மாற்றிக் கொள்ளுங்கள் காரணம் நீங்கள் நினைப்பது போல் குசேலர் எப்போதுமே ஏழையாக இருக்கவில்லை. உச்சக்கட்ட வறுமையில் பார்ப்பவர் உச்சுக் கொட்டும்படி இருந்த அவர், வசதிக்கும் வளமைக்கும் மாறி உச்சிவானைத் தொடும் உப்பரிகையுடன் கூடிய மாளிகையில் உயர்வான செல்வந்தராகவும் வாழ்ந்தார். குசேலர் என்றாலே வறியவன் என்று அர்த்தம். அப்படிப்பட்டவர் பணக்காரராக மாறக் காரணம் அச்சுதன் சொன்ன அட்சயம் என்ற வார்த்தை.

ஆமாம். குசேலர் எடுத்து வந்த அவலை ஆவலுடன் தின்றுவிட்டு கிருஷ்ணர் சொன்ன அந்த வார்த்தைதான் குசேலருக்கு செல்வ மகளின் பார்வை கிடைக்கச் செய்தது. "அட்சயம்" என்றால் தேயாமல் வளர்வது என்று அர்த்தம். அட்சய திருதியை என்பதற்கு வளர்ச்சியை ஏற்படுத்தும் திருதியை தினம் என்பது அர்த்தம். எல்லா வருடமும் போல இதோ இந்த வருடமும் அட்சய திருதியை வரப்போகிறது. (இந்த ஆண்டு, 24-12-2012 அட்சய திருதியை)

அன்றைய தினம் நீங்கள் தங்கம் வாங்கலாம், அல்லது வேறு ஏதாவது விலை உயர்ந்த பொருளை வாங்கலாம். சேமிப்பு ஏதாவது செய்யலாம். இதெல்லாம் உங்கள் வசதியைப் பெருக்கிக் கொள்ள உதவும். ஆனால் அவை நிலைக்க வேண்டுமானால் தெய்வத்தின் அருள் அவசியம். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியதுதான் அட்சய திருதியை விரதம். அட்சய திருதியை விரதத்தினை எப்படி கடைப்பிடிப்பது?

அன்றைய தினம் அதிகாலையிலேயே எழுந்து நீராடிவிட்டு, பூஜை அறையில் கோலமிடுங்கள். அதன்மேல் ஒரு மணைப் பலகையைப் போட்டு மேலே வாழையிலை ஒன்றினை இடுங்கள். இலையின் நடுவே கொஞ்சம் பச்சரிசியைப் பரப்பி அதன் மேல் ஒரு செம்பில் நீர் நிரப்பி மாவிலை, மஞ்சள் தடவிய தேங்காய் வைத்து கலசமாக்குங்கள். (அதனுள் காசுகளைப் போடுவது, காசுகளைப் பரப்பி அதன் நடுவே கலசத்தினை வைப்பது எல்லாம் அவரவர் வழக்கப்படி செய்யலாம்).

கலசத்தின் அருகே ஒரு படி, ஆழாக்கு, அல்லது ஒரு டம்ளரில் நெல் நிறைத்து வையுங்கள். கலசத்திற்குப் பொட்டு , பூ வையுங்கள். லட்சுமி நாராயணர் படம் இருந்தால் அதனையும் வைத்து அலங்கரியுங்கள். பின்னர் குத்துவிளக்கினை ஏற்றி வையுங்கள். மஞ்சள் பிள்ளையார் பிடித்து வாழையிலையில் வலப்பக்கமாக வையுங்கள். நீங்கள் புதிதாக வாங்கிய பொருளை கலசத்தின் முன்பாக வையுங்கள். (விலை உயர்ந்த பொருளாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. அட்சய திருதியை நாளில் எல்லோராலும் வாங்க முடிந்த பொருள் ஒன்று உண்டு. அதிக பலன் தருவதும் அதுதான். அதனை வாங்கி வைத்தாலே போதும் அஷ்டலட்சுமி கடாட்சம் உங்கள் வீடு தேடிவந்துவிடும். அது என்ன தெரியுமா? உப்புதான்)

முதலில் விநாயகரை வேண்டிக் கொள்ளுங்கள். பின்னர் கலசத்தில் மகாலட்சுமியை எழுந்தருளும்படி பிரார்த்தியுங்கள். உங்களுக்குத் தெரிந்த விஷ்ணு- லட்சுமி, சிவன் -பார்வதி, குபேரன், துதிகளைச் சொல்லுங்கள். அல்லது கேளுங்கள். குசேலரின் கதையைப் படிப்பது, கேட்பது, சொல்வதும் சிறந்தது. பின்னர் அவரவர் வழக்கப்படி தூப தீப ஆராதனைகள் செய்யுங்கள். இந்த பூஜையில் பாயாசம் அல்லது சாக்கரை கலந்த பால் நிவேதிப்பது சிறப்பானது.

அன்றைய தினம் மாலையில் சிவாலயம், பெருமாள் கோவில் என்று உங்களால் இயன்ற தலத்திற்குச் சென்று தரிசியுங்கள். அதன் பின்னர் மீண்டும் தூப தீப ஆராதனையை கலசத்துக்கு செய்துவிட்டு கலசத்தினை வடக்குப் பக்கமாக நகர்த்திவையுங்கள் . உண்ணாவிரதம் இருப்பது, எளிய திரவ ஆகாரம் மட்டும் உண்பது எல்லாம் அவரவர் வசதி, உடல் நலத்தைப் பொறுத்தது. கலசத்தினை நகர்த்துவது விரதத்தினை நிறைவு செய்துவிட்டதாக அர்த்தம். பயன்படுத்திய அரிசி, கலசத் தேங்காயை அடுத்த வெள்ளிக் கிழமை பூஜையில் உடைத்து பொங்கல் செய்யலாம். நெல்லை ஒரு முடிச்சாகக் கட்டி அரிசி வைக்கும் பாத்திரத்தில் வைத்து விடுங்கள். காசுகளை என்ன செய்வது ? அதுதான் உங்களுக்கே தெரியுமே... ஆமாம்... பீரோவில் வையுங்கள்.

அட்சய திருதியை நாளில் விரதம் இருப்பது, பூஜைகள் செய்வது, புதிய பொருட்களை வாங்குவது எல்லாவற்றையும்விட முக்கியமானது, தானமளிப்பதும், முன்னோர் கடன்களைச் செய்வதும்தான். இல்லாதோருக்கு உங்களால் இயன்ற அளவுக்கு உதவுங்கள். பெற்றார் பெரியோரிடம் ஆசி பெறுங்கள். நீத்தார் கடன்களை அவசியம் செய்யுங்கள். அட்சய திருதியை நாளில் மட்டுமல்ல எல்லா நாளிலும் உங்கள் இல்லத்தில் அட்சயமாய் செல்வம் பெருகும், நிலைக்கும்!

- நன்றி - காசிவாசி குருஸ்ரீ காளிதாஸ் மகரிஷி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மங்களகரமாக மலர்ந்துள்ள இவ்வருடம்
நம் மண்ணுக்கும், மக்களுக்கும்
நன்மைகள் பல தரும்
நல்லாண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.
35 %
SPECIAL DISCOUNT
COUPON PAGE 59
AMBIKA'S
Specialist in Wedding Sarees,
New arrivals Ribbon sarees
1E,Orchard Shopping Complex,
(opp.Savoy) Sinsapa Road,
Wellawatte,Colombo-06. Tel : 011-2555611




## மன அமைதி பூங்காவுக்கு ஒரு நல்வாழ்க்கை பாதை - ஸ்வாமி சிவானந்தா

**கடவுளின் அளவுகோல் என்பது...**

எத்தனை முறை பிரார்த்தனை செய்யப்பட்டது, எத்தனை தடவை மந்திரங்கள் செபிக்கப்பட்டன, எத்தனை முறை விளக்குகள் ஏற்றப்பட்டு ஆரத்தி காண்பிக்கப்பட்டது, எத்தனை முறை மணி அடிக்கப்பட்டு, மறைநூல்கள் வாசிக்கப்பட்டன - போன்றவற்றால் மனிதரின் செயல்களை தெய்விக அளவுகோல்கள் மதிப்பிடுவதில்லை. உங்கள் இதயத்தில் எழும் எண்ணங்களின் தரத்தைப் பொறுத்து, எத்தகைய வார்த்தைகளை நீங்கள் உங்கள் அண்டை அயலாரிடம் பயன்படுத்துகிறீர்களோ அவற்றை பொறுத்து, உங்கள் வாழ்வை நீங்கள் யார் யாருடன் கழிக்க வேண்டும் என்று இறைவன் விதித்திருக்கிறானோ அவர்களுடன் நீங்கள் ஈடுபடும் ஒவ்வொரு செயலையும் பொறுத்தே தெய்விக அளவுகோல்கள் மனிதனை மதிப்பிடுகின்றன என்று நான் திட்டவட்டமாக உங்களுக்குக் கூறுகின்றேன்.

**உங்களுக்கு மன அமைதி வேண்டுமா?**

நல்லாரோக்கியமும், பொருளாதாரப் பாதுகாப்பும் மன அமைதிக்கு மிகவும் இன்றியமையாதவை என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் இவை இரண்டும் இருப்பினும், பலரும் தொடர்ந்து மன அமைதியின்றி அல்லல்படுகின்றனர். நீங்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்களா? ஆமாம் என்று நீங்கள் பதில் சொன்னால் மேலும் இதைப் படியுங்கள் உங்களது தொல்லைகள் பெரும்பாலும் நீங்களாகவே உண்டாக்கிக் கொண்டது என்பதால், அவை தவிர்க்கப்படக் கூடியவையே. எப்படி என்று நாம் பார்ப்போம்- நீங்கள் அடிக்கடி பிறர் விஷயங்களில் தலையிடுகிறீர்களா? அவர்கள் தவறாகவே இருக்கலாம். ஆனால் அதை முன்னிட்டு நீங்கள் அல்லல் உறுவானேன்? யாரையும், எதையும் குறை கூறாதீர்கள். பிறருக்கு தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை கடவுள் உங்களுக்குக் கொடுக்கவில்லை. எல்லோரும் அவரவர் விருப்பப்படியே நடக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்குள்ளே இலங்கும் கடவுள் அவர்களை அப்படிச் செய்யத் தூண்டுகிறார். உங்கள் அமைதியைப் பாதுகாக்க நீங்கள் உங்கள் சொந்த வேலையில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும் என்பது ஒரு நல்ல விதியாகும்.

**வேலை அதுவே ஒரு தியானம்**

உங்கள் வேலையில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். மன அமைதிக்கு முக்கியத்துவம் தருவோர் எல்லாவற்றிற்கும் மேலாக கடைப்பிடிக்க வேண்டிய நியதி இது. இந்த உலகத்தில் எதுவுமே உங்கள் கவனத்தை வேண்டுவதில்லை. அனைத்தையும் கவனிக்க ஒரு ஆண்டவன் இருக்கிறார். உண்மையில், உங்களையும் கவனிப்பது அவர்தானே! இந்த உண்மையை மறக்கக்கூடாது.

**குறை கூறலாமா?**

நான் திரும்பவும் கூறுகின்றேன், உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள். எவரையும், எதையும் குறை கூறாதீர்கள். குறை கூறுதல் என்பது திட்டுவதற்கு நிகர். எது நடந்தாலும், அது கடவுளின்இச்சையால் நடக்கிறது. கடவுளின் அனுக்கிரகம் இன்றி எதுவுமே நிகழ்வதில்லை. ஏதாவது நிகழ்ந்தது என்றால் அது உங்கள் பார்வையில் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ இருக்கலாம். அதற்கு கடவுளின் அனுமதி இருக்கிறது என்றுதான் பொருள். நீங்கள் அதைக் கண்டனம் செய்தால் கடவுளின் விருப்பத்தை, கடவுளின் தீர்ப்பை நீங்கள் விமர்சிக்கின்றீர்கள் என்றுதானே அர்த்தம். அதைச் செய்யாதீர்கள். உங்களுக்கு அமைதி கிட்டும்.

**நம் விருப்பமா உலகை இயக்குகிறது?**

கடவுள் பொருள்களை முழுமையாக பார்க்கிறார். மனிதன் பொருள்களைப் பகுதியாகப் பார்க்கிறான். மனிதன் கடந்த காலம் மற்றும் எதிர் காலத்திலிருந்து பிரிந்து, நிகழ்ச்சிகளை நிகழ் காலத்தில் மட்டுமே பார்க்கிறான். கடவுளுக்கோ முன் நடந்ததும், பின் நடக்க வேண்டுவதும் தெரியும் அதனால்தான் கடவுள் ஒற்றுமையை காண்கிறார். மனிதன் வேற்றுமையைக் காண்கிறான். கடவுள் பூரணமான நியாயத்தைக் காணும் அதே தருணத்தில் மனிதனோ அதைக் காண்பதில்லை. நீங்கள் உங்களை கடவுளின் ஸ்தானத்தில் வைத்துப் பாருங்கள். நீங்களே கடவுள் என உணருங்கள். பிரபஞ்சம் முழுவதும் உங்களது படைப்பே என்றும், அனைத்தும் உங்கள் விருப்பத்தாலேயே நிகழ்கின்றன என்றும் உணருங்கள். உடனேயே உங்களுள் அபரிமிதமான அமைதியும், ஆற்றலும் ஊற்றெடுப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

**பிறர் நம்மைத் திட்டும்போது...**

பிறர் உங்களைக் காரணமின்றித் திட்டுவதாகவும், காரணமின்றித் துன்புறுத்துவதாகவும் நீங்கள் கூறுகின்றீர்கள். அது உண்மையாக இருந்தாலும் கூட அதற்காக அலட்டிக் கொள்ளாதீர்கள். நிலைமையைப் பொறுமையுடன் சமாளியுங்கள். இக்கட்டான நிலைமைகளைச் சமாளிப்பதில் அமைதி ஒரு சக்திவாய்ந்த ஆயுதம் என்பதை நீங்கள் காண்பீர்கள். யாராவது உங்களைத் திட்டினால் கண்களை மூடிக்கொண்டு பொறுமையாக இருங்கள். பிறர் அவர்கள் விருப்பம் போல் நினைக்கட்டும். அவர்கள் விரும்வதைச் சொல்லட்டும். இந்த உலகம் முட்டாள்கள் நிறைந்தது. நீங்கள் அறிவுடையவராக விளங்குங்கள் எல்லோர் முன்னிலையிலும் பணிவுடன் இருங்கள். எந்த நிலையிலும் அடக்கமாய் இருங்கள். நான் உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்ற எண்ணத்தை விடுத்து அனைவரிடமும், அனைத்திடத்தும் கடவுளைக் காணக் கற்றுக் கொண்டால்தான் இது சாத்தியமாகும். கடவுள் அப்படி விரும்புகிறார். எனவே அது அப்படி இருக்கட்டும் பிறர் உங்களை நிந்திக்கையில் நீங்கள் மௌனமாக இருங்கள். தலக்கம் அடையாதீர்கள். பழிச்சொற்களை ஏற்றுக் கொண்டால் அடக்கத்திலும், தூய்மையிலும் நீங்கள் வளர்ச்சி அடைவீர்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம் ஒரு பார்வை



**திருமதி இன்பம் கிறிஸ்டோபர் அவர்களின்
யோகாசனம் ஒரு பார்வை**

## ஆரோக்கிய இரகசியம்



சோம்பலுக்கு இன்று ஒரு நாளை நாம் கொடுத்தால், அடுத்த நாளை அது திருடிக்கொள்ளும். மனிதன் தோன்றிய நாளிலிருந்து யோகாசனம் இருக்கின்றது. நமது உடலையும், உள்ளத்தையும் ஆரோக்கியமான நிலையில் நாம் வழிப்படுத்தக்கூடிய உறுதியான நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். நமது உடலுக்கு வலிவையும், வனப்பையும் மட்டும் அளிக்கக்கூடியது அல்ல யோகாப்பியாசம். இந்த உடம்பு என்ற ஆலயத்தைத் தூய்மைப்படுத்தவும், அதை நோய் நொடிகள் அண்டாமல் பாதுகாக்கவும் உதவுவதுதான் யோகாப்பியாசம். ஆகவே அது பயிற்சி மட்டும் இன்றி நம்மைக் காக்கும் கவசமாகவும் விளங்குகிறது. ஒரு குறிப்பிட்ட உடல் பலம், இந்த இரண்டு எல்லைகளை மட்டும் வைத்துக் கொண்டு அவரவர் தகுதிப்படி எல்லோருமே எந்த நாட்டிலும் மேற்கொள்ளக்கூடிய கலையாக உள்ளது. உள்ளத் தூய்மைக்காகப் பிராணாயாமப் பயிற்சிகள் எடுத்துச் சொல்கின்றன. உடல் வலிவுக்காக ஆசன முறைகளைக் வரிசைப்படுத்துகின்றன. மனதை அமைதிப்படுத்தவும், செம்மைப்படுத்தவும் தியான முறைகளை கற்றுத்தருகின்றன.

உலகத்தில் வியாதிகளைப் போக்க என்னென்ன ஆராய்ச்சிகள் நடக்கின்றன? ஒவ்வொருவிதமான மருந்துகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள், சத்திர சிகிச்சைகள், மின்சார தொழில் நுட்பச் சாதனங்கள் எனப்பலப்பல. இவ்வளவிற்கும் நோய்கள் வராமல் இருக்கின்றனவா? இல்லையே. புதிய புதிய பெயர்களுடன் புதிய புதிய நோய்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றது. இப்படியான நோய்கள் வராமல் இருக்கவும், வந்ததைப் போக்கவும், மிகவும் பழமை வாய்ந்ததும் நமது முன்னோர்கள் விட்டுச் சென்றதுமான ஒரு பொக்கிஷம்தான் யோகாசனம்.

யோகாசனத்தை உருவாக்கிக் கொடுத்தவர் பதஞ்சலி முனிவர். அவர் எந்த விதமான ஆசனங்களை உருவாக்கினார் என்பதற்குத் தெளிவான தகவல் இல்லை. ஆனால் அவருக்குப் பின்னர் வந்த முனிவர்களும், ஞானிகளும் அநேகமான ஆசனங்களை இலகுவாக்கிக் கொடுத்தனர். இந்த ஆசனங்களை அடிப்படையாக வைத்து புதிய புதிய ஆசனங்களை ஒவ்வொருவரும் உருவாக்கிக் கொண்டனர். ஒவ்வொரு மனிதனும் வெற்றியைத்தான் விரும்பு கின்றான். அது தொழிலோ, விளையாட்டோ, கல்வியோ அல்லது வாழ்க்கையின் சகல எதிர்பார்ப்புகளோ எதுவாக இருந்தாலும் வெற்றியடைய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே பாடுபடுகிறான். வெற்றியும் தோல்வியும் மனிதனுக்கு மாறி மாறியே வருகிறது. தோல்வி ஒரு வெற்றிக்குக் காரணமாகலாம். "மனம் இருந்தால் மார்க்கம் உண்டு". தெளிவான, மகிழ்ச்சியான மன நலத்திற்கு உடல் நலம் மிக முக்கியமாகும். இயற்கை. உடலை உழைப்பிற்கு என்றே அமைத்துள்ளது. நமது உடலில் எந்தப் பாகமும் அவசியமற்றதல்ல. உடலின் ஒவ்வொரு பாகமும் உழைப்பில் ஈடுபட வேண்டும். இந்த வழியை மீறினால் உடல் பலவீனம் அடைந்து நோய் கொண்டு அழிவு ஏற்படும். சதைக் கூட்டங்கள் உழைத்தே உடல் வீரியம் பெற வேண்டும். உழைக்காத சதை மெலிந்து விடும் அல்லது ஊளைச் சதையாக பயனின்றி நமது ஜீவனுக்கு அவசியமற்ற பாரமாகிவிடும். இயந்திர முன்னேற்றம் நமது உழைப்பு வாழ்க்கையை கெடுத்துவிட்டது. இயந்திரத்தின் உதவி நம் உழைப்பின் நேரத்தையும், உழைப்பின் அவசியத்தையும் நீக்குவதே அதன் பயன்பாடு. சோம்பலுக்கு இடம் கொடுக்க மனிதன் ஆரம்பித்து விட்டான். இயந்திரம் நீக்கிக் கொடுத்த உடல் உழைப்பை மனிதன் வேறு விதமாய் பெற முயற்சி செய்யவில்லை. உடலை எந்தத் தீவிர திட்டத்தில் வைக்கின்றோமோ அதற்குத் தகுந்தது போலத்தான், அதாவது வீணைத் தந்தி போல் உயிர் நாதம் பெறும். சுருக்கமாகக் கூறிக்கொண்டால் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் யோகியாக வாழப்பழகவேண்டும். யோக வாழ்வைப் பின்பற்ற வேண்டும். யோகி என்றால் தாடி, அழுக்கு உடை, ஜடை, உருத்திராட்சையுடன் மலைகளில் வாழ்பவன் அல்ல. எங்கிருந்தாலும் தனது கடமையிலும் பிராணாயாமாம், ஆசனம் எனும் கோட்டைக்குள் வாழ்பவன்தான் யோகி.

மிதம் மீறி உண்பவனுக்கும், உண்ணாமலேயே இருப்பவனுக்கும், அதிகமாக தூங்குகிறவனுக்கும், தூக்கத்தை கெடுத்து விழித்திருப்பவனுக்கும் யோகம் கிடையாது. இவ்விரு பான்மையினரும் யோகிகள் அல்ல, இவர்கள் வாழ்க்கை, நோய் தடுக்கும் யோக வாழ்க்கையாகாது. கர்மங்களில் கச்சிதமான உழைப்பு, உணவு, ஓய்வு, தூக்கம், விழிப்பு உடையவனுக்கு துக்கத்தைப் போக்கும் யோகம் கிட்டுகிறது. நமது மேதாவிகள் உடற்பிணி, மனப்பிணி என்பவைகளுக்கு மேலாகப் பாவப்பிணி என்ற ஒன்று உண்டு என்பதையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். இம்மூன்றையும் (உடல்பிணி, பாவப்பிணி, மனப்பிணி) போக்கக்கூடிய வல்லமை யோகத்திற்கு உண்டு என்கின்றார்கள். இந்த யோகம் திடமான தீடமானத்துடன் பழக்கப்பட வேண்டும். எந்தப் பிணியும் மனிதனுக்கு துக்கம்தகன். துக்கத்தை தடுக்கும் வழி யோகம். தடுக்கிறவனே யோகி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு




தொடர்ச்சி.....

மிகவும் பாரதூரமான விபத்து. பேஜோ காரின் முன்பக்க என்ஜின் அடித்த அடியில் சப்பையாகிவிட்டது. வாகனத்தில் பிரயாணம் செய்த திரு.தளகுணே, வாகனச் சாரதி, நான் மூவரும் எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் தப்பினோம். உடனே தளகுணே எங்கள் குருவைக் கூப்பிட்டு "எல்லாம் சுவாமிஜியின் அருளாசி" என்றார். நான் சுவாமி பற்றி நினைக்கவில்லை. எனினும் அவர் சொன்னதை ஆமோதித்தேன்.

சுமார் இரண்டு, மூன்று மாதங்களின் பின் நாங்கள் இருவரும் சுவாமிஜியின் திருச்சியில் இருக்கும் ஆசிரமத்திற்கு சென்றோம். ஒரு நாள் சத்சங்கம் நடந்து கொண்டிருந்தது. சுவாமிஜியின் மேல்நாட்டு பக்தர் ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். அது எங்களுக்காக சுவாமிஜியால் கேட்க வைக்கப்பட்ட கேள்வியோ என்று நினைத்தேன். கேள்வி இதுதான் "சுவாமிஜி உங்கள் பக்தர் ஒருவருக்கு இடுக்கண் வந்தால் அது உங்களுக்கு எப்படித் தெரிய வரும்?"

உடனே சுவாமிஜி கூறினார்- "இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள் நான் இங்கு ஆசிரமத்தில் என் குடிசையில் மத்தியானம் 3 மணிபோல் படுத்திருந்தேன். திடீரென நான் கட்டிலில் இருந்து விழுந்துவிட்டேன்! ஏன் என்று பார்த்தேன். என் பக்தர் தளகுணேயும், விக்னேஸ்வரனும் ஒரு விபத்தில் அகப்படப்போவதைத் தெரிந்து கொண்டேன். உடனே நான் அங்கு சென்று இருவரையும் வாகன சாரதியையும் காப்பாற்றினேன். வாகனம் பலத்த சேதத்திற்கு உள்ளானது. அப்போது தளகுணே மட்டும் என்னை நினைத்தார் . விக்னேஸ்வரன் என்னை நினைக்கவில்லை" என்று கூறிவிட்டு எங்களைப் பார்த்துச் சிரித்தார். அவர் கூறியது முற்றிலும் உண்மை. அவரை நினைக்காத என்னைக் கூட விபத்திலிருந்து காப்பாற்றினார். குருவின் அருட்பார்வைக்கு நாங்கள் வந்து விட்டோமானால் தன்னை உதாசீனம் செய்யும் குழந்தையைக் கூட ஒரு தாய் கண்போல் காப்பது போல் குரு எம்மை எந்த நேரத்திலும் காப்பார்.

## குரு என்பவர் எமது பாவ புண்ணியங்களின் பலனால் எம்முடன் சேர்ந்து கொள்பவர்

குரு என்று தாம் நம்பியவர்கள் தம்மை வஞ்சித்து விட்டார்கள் என்று கூறுவோர் பலர் இருக்கின்றார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். குருவை வெறும் உலக நன்மைகளுக்காக மட்டும் நாடுவோர்கள் இருக்கின்றார்கள். ஆனால் உண்மையான குரு உங்களின் ஆத்மா ஈடேற்றத்தில்தான் குறியாக இருக்கின்றார். சில நேரங்களில் உங்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தி இந்த உலகத்தின் நிரந்தரமற்ற தன்மையை உங்களுக்கு உணர்த்த வேண்டிய கடப்பாடு அவருக்கு உண்டு. நீங்கள் நினைத்தது நினைத்தபடி நடக்கவில்லை என்றதும் குருவை தூற்றுவது உங்கள் அறியாமையால் ஏற்படும் ஒரு நிலை. ஒரு நல்ல குருவைப் பெற பல பிறவிகளில் புண்ணியஞ் வெய்திருக்க வேண்டும் நீங்கள். இலகுவாக அவர்கள் உங்களை நாடி வரமாட்டார்கள். ஆனால் உங்களுக்குப் பக்குவ நிலை வரும் நேரம் வந்தவுடன் குரு தானகவே உங்களை நாடி வந்து விடுவார்.

மக்களின் கைரேகையை வைத்துக் காண்டம் வாசிப்பவர்கள், ஓலை வாசிப்பவர்கள் சில தருணங்களில் கண்ட உண்மைதான் அந்தந்த நபர்களின் குருவின் பெயரை அந்த ஓலைகளில் வாசித்தறிவது. அது எப்படி இன்னார் ஒருவரின் குருவாக இருந்து வழி நடத்துவார் என்று ஓலைகளில் கூறப்பட்டிருக்கின்றது எனபது பற்றி ஆராய்ந்தோமானால் பல பிறவிகளில் உங்களைத் தொடர்ந்து வந்து அவர் உங்களுக்கு இப்பிறவியில் குருவாக பரிணமிக்கின்றார் என்ற உண்மை வெளிவரும். அதாவது சிலரின் வாசிப்புக்களில் இந்த குரு உங்கள் முன்னைய பிறவிகளிலும் உங்களுடன் இருந்தார் என்று கூறுவார்கள். அவ்வாறு வந்து வாய்க்கும் குருவானவர் நீங்கள் அவரை அண்டாவிடினும் அவர் உங்களை மேற்பார்வை பார்த்துக் கொண்டே இருப்பார்.

முன்னைய எடுத்துக்காட்டில் நாங்கள் ஆசிரமத்தில் சுவாமிஜியைக் கண்ட போது அவர் கூறினார் "விபத்து நடந்த போது தளகுணே என்னை நினைத்தார். விக்னேஸ்வரன் என்னை நினைக்கவில்லை" என்று அதுதான் உண்மை. அங்கு நினைக்காத என்னை என் குருநாதர் காப்பாற்றியுள்ளார் என்றால் அதுஎன் பூர்வீக நற்கர்மம் அல்லாது வேறு என்னவாக இருக்கும்? மேலும் ஒரு உண்மைச் சம்பவம் பற்றிக் கூறுகின்றேன்.

அப்போது நான் அனுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். எங்களுக்கு உத்தியோகபூர்வ வதிவிடமொன்று நுவரவெவ குளத்திற்கு அருகாமையில் தரப்பட்டிருந்தது. ஒருநாள் குழந்தைகள் கூடக் குளிக்கின்றார்கள் என்று நானும்" பேதிங் ட்ரங்ஸ்" உடுத்திக் கொண்டு குளத்தில் கால் வைத்தேன். சுமார் 10-15 அடி தூரத்தில் குழந்தைகள் 1 அல்லது 2 அடி நீரில் குளித்துக் கொண்டிருந்தனர். நான் கால் வைத்த இடமோ கரையை ஒட்டிய இடம். கால் வைத்ததும் 15அல்லது 20 அடி ஆழத்திற்கு நான் நீருள் அமுங்கி விட்டேன். எனினும் நான் பதட்டம் அடையாமல் நீரின் மேல்ப்பகுதிக்கு நீந்திக் கரைச் சேர்ந்தேன்.அந்தத் தருணம் பார்த்து நான் யார் என்று அடையாளம் கண்ட ஒருவர் ஓடி வந்து "என்ன சேர்! இந்த இடத்தில் கால் வைத்தவிட்டீர்களே. இங்கு ஒரு மாதத்திற்கு முன் ஒருவர் இதே இடத்தில் கால் வைத்து நீரில் அமிழ்ந்து இறந்து போனது உங்களுக்குத் தெரியாதா? இங்கு களவாக மண் அகழ்வதால் ஆழமான குழிகள் கிண்டப்பட்டு மழைக்காலத்தில் அவை மழை நீரினால் நிரப்பப்படுகின்றன" என்று கூறினார். எனக்குத் தெரியாது என்று கூறிவிட்டு அடுத்த நாளே அந்த இடத்தில் "ஆபத்து கால் வைக்காதீர்" வாசகம் கொண்ட ஒரு அறிக்கையை அங்கு விளம்பரப்படுத்த நடவடிக்கை எடுத்தேன். ஆனால் அன்று நான் தப்பியது என் பூர்வீக நற்கருமமே என்றுதான் நான் நினைக்கின்றேன். என்னைக் குருவின் ஆசியே காப்பாற்றியது என்றும் நம்புகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள ஒரு நகரமாகும். வவுனியா வன்னி மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். இதன் எல்லைகளாக மன்னார், முல்லைத்தீவு, அனுராதபுரம், திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ளன. இலங்கையில் இரு தசாப்தங்களிற்கும் மேலாக நடந்த உள்நாட்டுப் போரினால் மக்கள் இடம் பெயர்ந்து இப்பகுதியில் குடியேறினார்கள். இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மிகவும் வளர்ச்சியுடைய நகரமாக அமைந்துள்ளது. ஈழப்போரில் வன்னிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் இம்மாவட்டத்திலேயே உள்ளனர். மெனிக்பாம் நலன்புரி நிலையம் இங்கு அமைந்துள்ளது.

கல்வி

பல்கலைக்கழகம்

யாழ் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகம் வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ளது. இவ் வளாகத்திற்காக ஒரு தொகுதி நிலப்பரப்பானது யு30 வவுனியா மன்னார் வீதியில், வவுனியா நகரத்திலிருந்து 8 கிமீ தொலைவிலுள்ள பம்பைமடுப் பகுதியில் ஒதுக்கப்பட்டு விடுதிகளிற்கான ஆரம்பவேலைகள் தொடங்கியுள்ளபோதிலும் உள்நாட்டுப் போர் காரணமாக இதன் கட்டட வேலைகள் முடிவடையவில்லை. இதை விட வவுனியா குருமன்காட்டில் விஞ்ஞான பீடமும், மற்றும் புகையிரத நிலைய வீதியூடாகச் செல்லும் உள்வட்ட வீதியில் முகாமைத்துவக் கற்கைகளும் பார்க் வீதியில் யாழ் பல்கலைக் கழகத்தின் ஆங்கில பீடமும் அமைந்துள்ளது.

பாடசாலைகள்

வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை, (1878 இல் அமைக்கப்பட்டது, வவுனியாவின் முதல் பாடசாலை, வவுனியா மகா வித்தியாலயம், இறம்மைக்குளம் மகளிர் கல்லூரி,வவுனியா பெரியகோமரசன்குளம் மகா வித்தியாலயம் வவுனியா தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம், வவுனியா விபுலாநந்தா கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாலயம் வவுனியா இந்துக் கல்லூரி, வவுனியா பூந்தோட்டம் தமிழ் மகா வித்தியாலயம், ஓமந்தை மத்திய கல்லூரி வவுனியா சர்வதேசப் பாடசாலை, தொழில் நுட்பக் கல்லூரி ,வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி வவுனியா மன்னார் வீதியில் ஏறத்தாழ 5 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. இதை விட வவுனியா பூந்தோட்டத்தில் தேசிய கல்வியியல் கல்லூரி அமைந்துள்ளது. வவுனியா யாழ்ப்பாணம் வீதியில் தாண்டிக்குளம் என்ற இடத்தில் வவுனியா விவசாயக் கல்லூரி அமைந்துள்ளது.

இந்தக் கல்லூரி, 1989 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாணத்தில், விவசாய Diploma படிப்பை வழங்குவதற்காக ஆரம்பிக்கப் பட்டது. மத வழிபாட்டுத் தலங்கள்,வவுனியாவில் நான்கு மதங்களுக்குமான வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. சைவக் கோயில்கள்,சித்திவிநாயகர் ஆலயம், குடியிருப்பு, வவுனியா கோவில்குளம் சிவன் கோயில், லக்சுமி சமேத நரசிங்கர் ஆலயம், பூந்தோட்டம், வவுனியா சிறிதேவி பூதேவி மகாவிஸ்ணு கோயில் காளிகோயில்-குருமன்காடு, ஸ்ரீ கந்தசாமி கோயில்,சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் பழனி மலை முருகன் கோயில்-சிதம்பரபுரம், ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்-வெளிக்குளம் சமளன்குளம் கல்லுமலை பிள்ளையார் கோவில், ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்- சமளன்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்- தெற்கிலுப்பைக்குளம், ஸ்ரீ நரசிம்மர் ஆலயம்-தெற்கிலுப்பைக்குளம்,ஐயப்பன் தேவஸ்தானம்-கோவில்குளம்.

கிறித்தவ ஆலயங்கள்

கல்வாரி (இயேசு பகவானின் அவதாரங்களை உள்ளடக்கிய சிற்பங்கள் உள்ளது)

புனித அந்தோனியார் தேவாலயம்-இறம்பைக்குளம்,புனித செபஸ்ரியார் தேவாலயம்-தெற்கிலுப்பை

குருசாண்டவர் தேவாலயம்- தச்சன்குளம், ஜெகோவாவின் சாட்சிகளின் ராஜ்ய மன்றம் - உக்குளாம் குளம்

போக்குவரத்து

வவுனியாவினூடான தொடருந்து சேவைகள் ஓமந்தை முதல் கொழும்பு வரை நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து பேருந்து சேவைகள் வவுனியா ஊடாக கொழும்பு மற்றும் பிற நகரங்களுக்குச் செல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பக்கம்

# நவாலியூர் சோமசுந்தர புலவர்



பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டில் தமிழை தமது மூச்சாக கொண்டு வாழ்ந்த அறிஞர்கள் பலர். இவர்கள் தமிழ் மொழிக்கென பல இலக்கிய வடிவங்களை உருவாக்கியவர்கள். இவர்களால் தமிழ்மொழி செழுமை பெற்று வளர்ந்ததென்றே கூறலாம். சில பாடல்களை கேட்கும்போது நாமும் பாடவேண்டும் என்ற ஊக்கத்தை தர வல்லன. இவ்வாறான பாடல்களை தந்தவர்களுள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரும் ஒருவர். இவர் ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நவாலி என்னும் ஊரில் 1880ம் ஆண்டு ஆனி மாதம் 12ம் திகதி வன்னிய சேகர முதலியார் வழித்தோன்றலாய் வாழ்ந்த கதிர்காமர் இலக்குமிப்பிள்ளை என்போருக்கு திருமகனாய் பிறந்தார். ஆரம்பத்தில் தனது கல்வியை அருணாசல உபாத்தியாயரிடமும், தனது தந்தையிடமும் திறம்பட கற்ற இவர் பதினைந்தாவது வயதில் பல பாடல்களை தாமாகவே ஆக்கத் தொடங்கினார். வட்டுக்கோட்டையில் உள்ள சின்னத்தம்பி ஆசிரியரும் சோமசுந்தரப் புலவரும் சேர்ந்து அவ்வூரில் ஒரு ஆங்கிலப் பாடசாலையைத் தொடங்கினார்கள். அப்பாடசாலையில் புலவர் நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், இதிகாசம் போன்ற பாடங்களையும் கற்பித்தார். இவர் தமிழையும், சைவசமயத்தையும் பல நற்பணிகள் செய்து மேன்மையடையச் செய்தார். தனது 28வது வயதில் இல்லற வாழ்வில் இணைந்து ஐந்து பிள்ளைகளை பெற்று சிறப்பாக வாழ்ந்து வந்தார். இவர் யாப்பிலக்கணங்கள் கற்பதற்கு முன்னரே பல தனிப்பாடல்களை பாடினார். இதனால் இவரை "வரகவி" என்று அழைத்தனர். சிறுவர்களுக்கெனப் பல கதைப்பாடல்களையும் பாடியுள்ளார். "தாடி அறுந்த வேடன்", "எலியும் சேவலும்" என்ற கதைப்பாடல்கள் இவரின் கவிதை ஆற்றலை பறைசாற்றுவதுடன் சிறுவர்களை சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பன. இவை சிறுவர்களால் நாடகமாகவும் நடிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இவற்றை கவிதைநாடகம் என்றும் கூறுவர். சோமசுந்தரப் புலவர் சிறுவர்களிற்காக ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி, புளுக்கொடியல், பவளக்கொடி, இலவுகாத்தகிளி முதலான பல பாடல்களை பாடியுள்ளார். இவர் சிறுவர்களுக்காக பாடிய பாடல்கள் "சிறுவர் செந்தமிழ்" என்ற பெயரில் 1955ம் ஆண்டு நூலாக வெளிவந்தது. ஈழத்தில் சிறுவர் இலக்கிய முன்னோடி என்ற பெருமையும் இவருக்குரியதாகும். ஈழத்தில் சிறுவர் இலக்கியம் வளரவேண்டும் என்பதற்காக கல்வி அதிகாரியாக பணியாற்றிய க.ச.அருள்நந்தி அவர்கள் முதன்முதலில் ஒரு சிறுவர் இலக்கியத்திற்கான போட்டியை நடத்தினார். இப்போட்டியில் சோமசுந்தரப்புலவர் பங்குபற்றி வெற்றியும் பெற்றார். இதனால் மக்கள் மத்தியில் புகழும் பெற்றார். இவரது காலத்திலேயே விபுலானந்த அடிகளாரும், சுவாமி ஞானப்பிரகாசரும் வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1925ம் ஆண்டு "உயிரிளங்குமரன்" என்னும் நாடகத்தை எழுதினார். இந்நாடகத்தின் சிறப்பை பாராட்டிய இலங்கைத் தமிழ்ப் புலவர்கள் "புலவர்" என்னும் பட்டத்தை இவருக்குச் சூட்டினார்கள். இவர் அந்தாதி, கலம்பகம், வெண்பா, பதிகம் போன்ற பல இலக்கிய வடிவங்களை தந்துள்ளார். அநுமாத்திரமல்லமல் தில்லைஅந்தாதி, அட்டமுகில் கலம்பகம், கதிரைச்சிலேடைவெண்பா, கழையோடைவேற்பதிகம், விநாயகர் பாமாலை, மரதனோட்டம், நல்லை திருப்புகழ், நல்லையந்தாதி, நான்மணிமாலை, இலங்கைவளம், தாலவிலாசம், தந்தையார் பதிற்றுப்பத்து, நாமகள் புகழ் மாலை, முருகன் பாமாலை, சுகாதாரக் கும்பி போன்று சுமார் 15000 பாடல்களை (செய்யுள்கள்) இயற்றியுள்ளார். ஈழத்தமிழ் கவிதை வரலாற்றில் சிறுவர்பாடல்களால் முக்கியத்துவம் பெற்று "தங்கத்தாத்தா" என செல்லமாக அழைக்கப்பட்ட நவாலியூர் சோமசுந்தரப் புலவர் கி.பி. 1953ம் ஆண்டு ஆடி மாதம் 10ம் திகதி மண்ணுலகை விட்டுப்பிரிந்தார். இவர் இவ்வுலகைவிட்டுச் சென்றாலும் இவர் விட்டுச்சென்ற இலக்கியங்கள் தமிழ் வாழும்வரை வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பது திண்ணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத் துறையின் சிம்ம சொப்பனம்

## மேரி கொல்வின்



பிறப்பால் அமெரிக்கர். ஆனால், லண்டனில் தான் அதிகமாக வாழ்ந்தார். நியூயோர்க் யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனலில் பொலீஸ் நிருபராக 1978-ல் சேர்ந்தார். ஏழு ஆண்டுகள் கழித்து சண்டே டைம்ஸில் வேலை பார்க்க பிரிட்டன் வருகிறார்.

மத்திய கிழக்கு நாடுகளின் சிறப்பு நிருபர் பணி இவருக்குத் தரப்படுகிறது. அடுத்த 10 ஆண்டுகளில் உலகச் செய்திகள் அனைத்தையும் கவனிப்பதற்கான பெரும் பொறுப்பு இவருக்குக் கிடைக்கிறது. லிபியா அதிபர் கடாபிதான் இவர் முதன் முதலாகச் சந்தித்த ஒரு நாட்டின் அதிபராவார். கடாபி இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன் மேரி கொல்வின் அவரை சந்தித்துள்ளார். கொசோவா, ஸிம்பாப்வே, கிழக்கு தைமூர்... என எங்கு உள்நாட்டு யுத்தம் நடந்தாலும் அங்கே மேரி கொல்வின் சென்றுவிடுவார். அதனாலேயே 'போர்ச் செய்தியாளர்' என்ற பட்டம் தாங்கினார். பொதுவாக, பெரும் பத்திரி கைகளில் 'வார் ரிப்போர்ட்டர்' என்று இருப்பார்கள். இராணுவம் எத்தகைய ஆயுதங்களை வைத்துள்ளது. என்ன மாதிரியான வெடிகுண்டுகள் வைத்திருக்கிறார்கள், ஒரு குண்டு எத்தனை கி.மீ. தாண்டிப் போய் வெடிக்கும், இராணுவத் தளபதிகளின் சாகசம் என்ன என்று எழுதி 'வார் ரிப்போர்ட்டர்' ஆனவர்கள்தான் அதிகம். ஆனால், மேரி கொல்வின் வித்தியாசமானவர். போர்ச் சூழலில் பலியாகும் பெண்கள், குழந்தைகள் படும் அவஸ்தைகள் மூலமாக ஆயுதங்களின் கோரத்தை எழுதுவதன் மூலமாக 'அமைதி நிருபராக' இருந்தவர். 1999ம் ஆண்டு கிழக்கு தைமூர் போர்ச்சூழலில் 1,500 பெண்கள் தங்களது பிஞ்சுக் குழந்தைகளுடன் சிக்கிக்கொண்டபோது ஐ.நா. அமைப்புடன் பேசி அவர்களை மீட்கத் துடித்தவர் கொல்வின். கடைசியில், அவர்கள் அத்தனை பேரையும் காப்பாற்றவும் செய்தார். 2000-ம் ஆண்டில்தான் அவரது பார்வை இலங்கைப் பக்கமாகவும் திரும்பியது. நேரடியாக இலங்கை வந்தார். அப்போது, அவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில்தான் அவரது இடது கண்ணின் பார்வை முழுமையாகப் பறிபோனது.அன்று முதல், கருப்புத் துணியைக் கண்ணில் கட்டிக் கொண்டு நடமாடினார். நான்காம் கட்ட ஈழப் போர் என்று அழைக்கப்படும் 'முள்ளிவாய்க்கால் படுகொலை' நேரத்தில் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை, ஐ.நா. அமைப்புக்கும் புலிகளுக்கும் நடந்தபோது இணைப்பாளராக இருந்தவர் மேரி கொல்வின்தான். சிரியாவும் அவரை மிரட்டியது. இந்த நாட்டுக்குள் வரக்கூடாது என்று சொன்னது. மீறித்தான் மேரி கொல்வின் சென்றார். தன்னுடன் பிரெஞ்சு புகைப்படக் கலைஞர் ரெமி ஒச்லிக் என்பவரையும் அழைத்துச் சென்றார். ஹோம்ஸ் நகரத்தில் இருந்த 'அரசு எதிர்ப்பாளர்கள் ஊடக மையம்' என்ற இடத்தில் தங்கி இருந்தார். அந்த வீட்டில் கடந்த 23-ம் தேதி காலையில் ஒரு ஷெல் வந்து விழுந்தது. கட்டடத்தில் இருந்தவர்கள் வெளியே ஓடியபோது ராக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. அந்த இடத்திலேயே மேரி கெல்வினும் ரெமி ஒச்லிக்கும் மரணம் அடைந்தார்கள். எங்கோ பிறந்து யாருக்காகவோ உழைத்து, எங்கோ இறந்துபோன கொல்வினின் வாழ்க்கை, நம் அனைவருக்குமான தூண்டுதல்!

## கடந்த மாத இதழில் தெரிவு செய்யப்பட்டு பரிசுபெற்றவர்களின் விபரம்

**Facebook Quiz சரியான பதில்**

1. Doctor A.P.J Abdul Kalam
2. Holoparasite and the Ghost Orchid
3. Tambiran Vankam in 1954

பரிசு பெற்றவர் : செல்வி.சிந்துஜா

**LBN சரியான பதில்**

1. நக்கீரன்

பரிசு பெற்றவர் : ச.கோகுலவாணி
கோண்டாவில் மேற்கு, யாழ்ப்பாணம்

**சினிமா பக்க சரியான பதில்**

1. அஞ்சலி

பரிசு பெற்றவர் : T.வசந்தகுமார்
அம்பத்தன,பண்டாரவளை

**பரிசுபெற்ற சமையல் குறிப்பு**

**கோவா வடை**

எழுதியனுப்பியவர் : N.சந்திரிக்கா
லூர்து மாவத்தை, சிலாபம்.

**சிறுவர் பக்கத்தில் சிறந்த வர்ணம் தீட்டி தெரிவுசெய்யப்பட்டவர்**

எழுதியனுப்பியவர் : J.R.வஷ்னீ
வயது 4, எமில் நகர்,மன்னார்.

தொடர்புகளுக்கு : ரஜீவ்
**0727384462**



எமது குளோபல் எக்ஸ்பிரஸின் எட்டாவது சஞ்சிகையின் முதல்பிரதி சமூக சேவையாளரும், பட்டக்கண்ணு தா்மநிதி ஸ்தாபனத்தின் தலைவருமான திரு.க.தியாகராஜா அவா்களுக்கு எமது விற்பனைத்துறை ஒருங்கமைப்பாளா் ரஜிவ் அவா்களினால் கடந்த 10-03-2012 அன்று அவரது அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலாப் பக்கம்

# பேராதனை தாவரவியற் பூங்கா



பேராதனை தாவரவியற் பூங்கா இலங்கையிலுள்ள மிகப் பெரிய தாவரவியற் பூங்கா ஆகும். இது இலங்கையின் சுற்றாலாத்துறையைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருப்பதுடன், நிறைந்த கல்விப் பெறுமானமும் கொண்டது. ஏராளமான உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக இது இருந்து வருகிறது.

## அமைவிடம்

இப் பூங்கா, இலங்கையின் மத்திய மாகாணத்தில் உள்ள கண்டி நகரிலிருந்து 6.5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள பேராதனை என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இது இலங்கையில் தலை நகரான கொழும்பிலிருந்து சுமார் 110 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. கொழும்பு - கண்டி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இப் பூங்காவின் மூன்று பக்கத்தைத் தழுவியபடி இலங்கையின் மிக நீளமான நதியாகிய மகாவலி கங்கை ஓடுகிறது. இப் பூங்காவின் மொத்தப் பரப்பளவு 147 ஏக்கர்கள் ஆகும்.

வரலாறு

14ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்தப் பகுதியின் வரலாறு தொடங்குகிறது. 1371 இல் மூன்றாம் விக்கிரமபாகு மன்னன் இவ்விடத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டான். 1747 - 1780 வரை கண்டியை ஆண்ட இராஜாதிராஜசிங்கனும், இவ்விடத்தில் தற்காலிகமாகத் தங்கியிருந்ததாக அறியப்படுகின்றது. 1815 ஆம் ஆண்டில் பிரித்தானியர்கள் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்னர். இப்பகுதி அவர்கள் கைக்கு மாறியது.

1810 இல் கொழும்பிலுள்ள கொம்பனித் தெரு என இன்று அழைக்கப்படும் இடத்தில் பிரித்தானியர் ஒரு தோட்டத்தை அமைத்திருந்தனர். பின்னர் 1813 இல், இது களுத்துறை என்னும் இடத்துக்கு மாற்றப்பட்டது. இது பொருளாதாரத் தாவரங்களான கோப்பி, இறப்பர் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான இடமாகவேயிருந்தது. 1814 இல் இதைப் பொறுப்பேற்ற அலெக்சாண்டர் மூன் என்பவரின் முயற்சியால் இது 1821 இல் தற்போதுள்ள இடத்துக்கு மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் கோப்பி, இறப்பர் போன்ற தாவரங்களே இங்கு காணப்பட்டன. பிற்காலங்களில் இதனைப் பொறுப்பேற்று நடத்திய அதிகாரிகள் பலரது முயற்சியால் ஏராளமான தாவர வகைகள் சேர்க்கப்பட்டு இன்றைய நிலையை அடைந்துள்ளது.

## சிறப்பம்சங்கள்

இப் பூங்காவில் இன்று ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தாவர வகைகள் உள்ளன. இங்குள்ள ஓக்கிட் பூங்கா புகழ் பெற்றது. இங்குள்ள வாசனைத் திரவியத் தோட்டம், கற்றாளையகம், அந்தூரியம் வளர்ப்பகம் என்பன இங்குள்ள சிறப்பம்சங்களாக உள்ளன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


GANESHA
Jewellers
(SINCE 1979)
கடந்த 33 வருட கால பாரம்பரியத்துடன்
தரமான தங்க நகைகளுக்கு
இல்லத்தில்
செல்வம் செழிக்கும்
இனிய அக்ஷய
திருதியை திருநாளை
எங்களுடன்
இணைந்து
கொண்டாடிடுங்கள்
இனிய புதுவருட
நல்வாழ்த்துக்கள்...
Genuine 22KT Jewellery
வேறு கிளைகள் கிடையாது...
52, Sea Street, Colombo 11, Sri Lanka.
Tel: 2432164, 0714 832 223
Fax: 2389743
Email: thanepk52@sltnet.lk,
thanepk52@hotmail.com
CARDS ACCEPTABLE
VISA
MasterCard
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






## கோவா வடை

மரக்கறி வகைகளில் கோவாவில் நிறைய சத்துக்கள் உள்ளன.
இப்பொழுது மிகவும் மலிவாக சந்தையில் கிடைக்கிறது
புதுவருடத்துக்கு (நந்தன வருடம்) வீட்டுக்கு வரும் விருந்தினருக்கு
புதமை படைப்போமா ?

**தேவையானவை**

கடலைப்பருப்பு- 500 கிராம்
கோவா - 250 கிராம்
உள்ளி - 6 பல்லு
பச்சைமிளகாய், வெங்காயம்,கறிவெப்பிலை போதுமான அளவு சிறிதாக வெட்டிக்கொள்ளவும்.
உப்பும் அளவுக்கு தேங்காய்யெண்ணை ½ போத்தல்
பெரும்சீரகம் கொஞ்சம்

**செய்முறை** : கோவாவை சிறு சிறு துண்டாக வெட்டி கழுவி நீரைவடியவிட்டு எடுத்துவைத்துக்கொள்ளவும்.
கடலைப்பருப்பை 9 மணித்தியாலங்கள் ஊறவிட்டு சீரகம் உள்ளி சேர்த்து அரைப்பதமாக அரைத்து, வெட்டிய கோவா சேர்த்து சிறுநேரம் அரைத்து பாத்திரத்தில் போட்டு வெட்டிய வெங்காயம், பச்சமிளகாய், கறிவெப்பிலை, உப்பு சேர்த்து பிசைந்து உருண்டைகளாக உருட்டவும்.

தாச்சியில் எண்ணெயக் கொதிக்கவைத்து. கொதித்தபின் உருண்டைகளை போட்டு சிவக்கப் பொறித்தெடுத்து சூட்டுடன் பரிமாறலாம்.

N.சந்திரிகா
இல.12/1,லூர்து மாவத்தை,
சிலாபம்.

## மீன் சட்னி வறுவல்

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| மீன் | 250 கிராம் |
| பூண்டு | 10 பல் |
| தே. எண்ணெய் | 1 கப் |
| மிளகாய்த்தூள் | 5 தே.கரண்டி |
| உப்பு | தேவையான அளவு |
| புதினா | சிறிதளவு |



**செய்முறை**
முதலில் உரலில் பூண்டையும் மிளகாய்த்தூளையும் வைத்து நன்றாக இடித்துக்கொள்ளவும். பின் அதே கலவையில் எண்ணெய் ½ கப் ஊற்றி நன்று இடித்தல் வேண்டும் பிறகு மீனின் எல்லாப் பகுதிக்கும் நன்றாக இடித்தெடுத்த கலவையை தடவி 5 நிமிடம் வைக்க வேண்டும். பின் ஒரு பாத்திரத்தில் மற்ற ½ கப் எண்ணையையும் ஊற்றி மீனை நன்கு பிரட்டி , பிரட்டி வேக வைத்துக் கொண்டே மீனிற்கு தடவிப் போக எஞ்சிய கலவையையும் வேகும் மீனின் மேல் ஊற்றி நன்கு சூடு வரும் போது சிறிதளவு உப்பையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சற்று நிமிடத்தின் பின் இறக்கி அதன் மேல் புதினாவைத் தூவி பரிமாறிக் கொள்ள வேண்டும்.

A.A.N. FAHARA, 21/12, AKBAR LANE,COLOMBO - 2




"அம்மா எங்க டீச்சர் ஒரு லூசு!

ஏன் அப்படிச் சொல்றே?

பின்ன என்னம்மா? நேத்து 2ம் 2ம் நாலுன்னு சொன்னாங்க:
இன்னிக்கு 3ம் 1ம் நாலுங்கறாங்க!"

"இந்த வேலையில சேர்ந்தா வருஷா வருஷம் இன்க்ரிமென்ட் கிடைக்குமா?"

"கண்டிப்பா கிடைக்கும் ஆனா நீங்க நேர்மையா கஷ்டப்பட்டு உழைக்கனும்!"

"நினைச்சேன் இப்படி ஏதாவது ஒரு இடைஞ்சல் இருக்கும் என்று"

"பாவம் மச்சான் அந்த பொண்ணுக்கு காது கேக்காது போல....

என்டா ?

நான் ஐ லவ் யூ சொன்னா அவள் செருப்பு பிஞ்சிரும்ன்னு சொல்லுறாடா..."

"கோர்ட்டில் : "யுவர் ஆனர்! போலீஸ்காரர் விசிலடிச்சு, கையை ஆட்டி, என்னைக் கூப்பிட்டபோது நான் காரை நிறுத்தாமல் போனது வாஸ்தவம்தான்!"

"ஏன்"

"நான் அந்த மாதிரியான பொண்ணு இல்லை."

"ஏங்க வெள்ளவத்தைக்கு "துரு" பஸ் இருக்கா ?
இல்லீங்க எல்லாம் பெயின்ட் அடிச்ச பஸ்தான்....!

"என்ன உங்க பையன ப்ரிட்ஜ் உள்ள உட்கார வைச்சு இருக்கீங்க ?

அப்பதானே அவன் கெட்டுப்போகம இருப்பான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகைகள்

## தமிழர் வாழ்க்கை முறையில்

*பயன்பாட்டில் இருந்து வரும் பல்வேறு மூலிகைகளைப் பற்றிய தகவல்கள்*

துளசி
குப்பை மேனி
தூதுவளை
பிரண்டை
ஓரிதழ் தாமரை
வல்லாரை
கரிசலாங்கண்ணி
கடுக்காய்
வேம்பு
திருநீற்றுப்பச்சிலை
அறுகம்புல்
ஆவாரை
பசளைக் கீரை
சோற்றுக்கற்றாழை
முருங்கை
வில்வம்
மருதோன்றி
கண்டங்கத்தரி
நாயுருவி
கருவேப்பிலை
பொன்னாங்கண்ணி
நெல்லிக் காய்
நெருஞ்சில்
கீழாநெல்லி
பப்பாளி
இஞ்சி-சுக்கு
கற்பூரவள்ளி
நாவல்
அத்தி
அரசு
ஆல்
சீரகம்














செம்பருத்தி
மஞ்சள்
எலுமிச்சை
ஆடாதோடை
நன்னாரி
கொத்தமல்லி
வெற்றிலை
புதினா
சங்கு
தாமரை
அம்மான் பச்சரிசி
பொடுதலை
தும்பை
அகத்தி
கராம்பு
முடக்கத்தான்
அவுரி

தூதுவளையின் தொடர்ச்சி

முக்தி அடைவதற்குச் சகாயமாயிருக்கும். மகான்களிடத்தில் அனந்த காலம் காத்திருந்தாலும் மேற்குறித்த மூலிகையின் பிரயோசனத்தையும் உண்மையையும் அனுபவத்தையும் அவர்கள் வெளியிடமாட்டார்கள். என்கிறார். இலை கோழையகற்றும், உடல் தேற்றிக் காமம் பெருக்கும். பூ உடலுரமூட்டும் காமம் பெருக்கும். காய் கோழையகற்றிப் பசியைத் தூண்டி மலச்சிக்கல் அறுக்கும். பழம் கோழையகற்றும். தூதுவளை இலையைப் பிழிந்து எடுத்து சாற்றை 1 அல்லது 2 துளி காதில் விட்டால் காதுவலி, காதில் சீழ் வடிதல் ஆகியவை குணமடையும். இலையை நெய்யில் வதக்கி-துவையலாக, குழம்பாக கடைந்தோ சாப்பிட கபக் கட்டு நீங்கி உடல் பலமும் அறிவுத் தெளிவும் உண்டாகும். இலைச் சாற்றைச் சம அளவு நெய்யில் காய்ச்சிக் காலை மாலை ஒரு தேக்கரண்டி சாப்பிட்டுவர என்புருக்கிக் காசம் மார்புச் சளி நீங்கும். ஆஸ்துமா மூச்சுத் திணறலில் பழத்தூளைப் புகைபிடிக்கச் சளி இளகி குணப்படும். நாள்தோறும் 10 பூவைக் காய்ச்சிப் பால், சர்க்கரை கூட்டி ஒரு மண்டலம் (45 நாட்கள்) பருக உடல் பலம், முக வசீகரம், அழகும் பெறலாம். தூதுவளை இலையில் ரசம் வைத்துச் சாப்பிடலாம். தூதுவளை தோசை சாப்பிடலாம். தூதுவேளைக் கசாயம் குடிக்கலாம். தூதுவேளை உடல்வலிக் கோளாறு, நுரையீரல் கோளாறுகளைக் குணப்படுத்தும். பூ இதை உட்கொண்டால் உடல் பெருக்கும் , ஆண்மை பெருகும் வலிவு கிடைக்கும். காய் காயை உலர்த்தி தொடர்ந்து சாப்பிட்டுவர குடல் நோய்கள் தீரும். அழற்சி தீரும் .வாயு தொந்தரவு தீரும். பழம் இது மார்பில் இறுகிய சளியை நீக்கும். இருமல் நீக்கும். பாம்பின் நஞ்சு நீக்கும் .

# பிரண்டை



வெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறான் என்ற பழமொழிக்கேற்ப நம் அருகிலிருக்கும் மூலிகைகளின் ஊழிகை மருத்துவக் குணங்களை அறியாமல் கண் இருந்தும் குருடராய் அலைகின்றோம். பிரண்டை நாற்கோண வடிவ தண்டுகளையுடைய ஏறு கொடி இனமாகும். பற்றுக் கம்பிகளும் மடலான இலைகளும் கொண்டு இருக்கும். சாறு உடலில் பட்டால் நமைச்சல் ஏற்படும். சிவப்பு நிற உருண்டையான சிறிய சதைக் கனி உடையது. கால் அடி முதல் அரை அடி வரை நீளத்தில் கணுக்கள் அமைந்து இருந்தால் அது பெண் இனம் என்றும் அரை அடிக்கு மேல் ஓர் அடி வரை நீளவாட்டில் கணுக்கள் அமைந்து இருந்தால் அது ஆண் இனம். அருள்மிகு மேகலாம்பிகை சமேத சகலபுவனேஸ்வரர் திருக்கோயில், லலிதாம்பிகை கோயில் திருமீயச்சூர் பேரளம் அருகே உள்ளது. ஹோமமும், மிருத்யுஞ்சய ஹோமமும் இங்கு செய்வது சிறப்பு. பிரண்டை அன்னத்தை, தாமரை இலையில் சுவாமிக்கு அர்ப்பணம் செய்து, அன்னதானம் செய்தால் நீண்ட ஆயுளும், சகல நோய்களும் தீரும் என்பது நம்பிக்கை ஒரு காலத்தில் சாபத்தால் பீடிக்கப்பட்டிருந்த சூரியன், இங்கு வந்து வழிபட்டு, தனது கருமை நீங்கி, செவ்வொளி பெற்று இன்புற்றான். பிரண்டை இந்தியா, இலங்கை, வங்காள தேசம் போன்ற நாடுகளில் அதிகம் காணப்படும் கொடியாகும். ஓலைப்பிரண்டை, உருண்டைப் பிரண்டை, சதுரப் பிரண்டை , களிப் பிரண்டை, தீம்பிரண்டை, புளிப்பிரண்டை என பல வகைகள் உள்ளன. முப்பிரண்டை கிடைப்பதற்கரியது. இது ஒரு காயகல்பம். இதன் தண்டு, வேர், பழம் அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதலின் காயம் ஆறவில்லை யென்றால் கொஞ்ச நாள் காலத்தின் கையில் உங்களை விட்டு விடுங்கள்...



நாம் எத்தனையோ பெண்களை பார்க்கிறோம் பழகுகிறோம் ஆனாலும் நாம் பார்க்கும், பழகும் எல்லா பெண்களையும் நமக்கு பிடித்து விடுவதில்லை நமக்கு பிடித்த ஒரு பெண்ணைதான் நாம் விரும்பி காதலியாக்கிக் கொள்வோம் அப்படிப்பட்ட அழகான ஒரு காதல் மலர்ந்து வருவது நமக்கு கிடைக்கும் ஒரு பாக்கியம் அந்த வேளைகளில் இனி அவளுடனேயே ஆயுள் முழுவதும் வாழ்ந்து விட வேண்டும், அவளையே நம் வாழ்க்கையின் துணையாக்கிக் கொள்ள வேண்டும் என்று நமது விருப்பங்கள் நம்மிடம் ஓயாமல் பேசிக்கொண்டே இருக்கும்.

நமது மனதில் ஊடுருவி விட்ட அவளின் ஒவ்வொரு செயலும் நமக்கு பிடித்துவிடும்அவள் எதை செய்தாலும் அவளை குற்றம் கண்டுபிடிக்க முடியாது அந்த அளவிற்கு அவள் சொல்லும்சின்ன சின்ன பொய் களையும் தவறுகளையும் ரசித்து ரசித்து பழகி விடுவோம் அப்படிப்பட்ட நாம் ஒரு நாள் அவளையே பிரிந்து விடுகிற கட்டாயம் ஏற்படும்போது அதனுடைய ஆழமான வலிகள் நம்மை எங்கேயோ தூரத்தில் கொண்டு சென்று விட்டு விடுகின்றது அங்கே எதுவும் நம்மை ஆறுதல்படுத்த முடிவதில்லை.

பிரகாசமாக இருந்த நம் வாழ்க்கை இருண்டுபோய் கிட்டத்தட்ட ஒரு பைத்தியக்காரனைப் போல இருப்பதைதான் அப்போது நம்மால் உணர்ந்து கொள்ள முடியும் இப்படிப்பட்ட சூழலில்தான் சிலர் மதுவின் துணையை நாடி செல்கின்றனர் அதிலும் ஆறுதல் கிடைக்காமல் போனால் இறுதி ஆறுதலுக்காக மரணத்தையே தேடிப்போனவர்களும் பலர் உண்டு இன்னும் சிலர் அவளை பிரிந்தாலும் தன் இதயத்திலிருக்கும் அவளின் நினைவுகளோடு வாழ்ந்து விடுவார்கள் இதனால்தான் பலர் தாடியுடன் சோகமாக அலைகிறார்கள்.

இப்படிப்பட்ட காதலின் தோல்வி என்பதுதான் என்ன! இது எந்த அளவிற்கு நம்மை பாதிக்கும், மதுவும் மரணமும் இதற்கான தீர்வா? இதைப்பற்றிய நல்ல ஞானமுள்ள தெளிவுகள் நமக்கு தேவை, காதலினுடைய தோல்வி நம்மை எதுவும் செய்து விட முடியாது என்பதை சில உண்மைகளின் நாம் மூலமாக தெரிந்து கொள்வோம். காதல் வயப்படும் போது தன்னுடைய சினேகிதியை தன்னுடையவளாக, தனக்கு சொந்தமானவளாக எவ்வளவு உரிமை எடுத்துக் கொள்ள முடியுமோ அதனை இறுதி அளவு வரையிலும் அவளை தனக்கு உரிமையாக்கி தன் உரிமை யானவள் என்ற ஒரு பதிவை மனதில் பதித்து வைக்கிறார்கள் அவள் கைவிட்டு செல்லும் போது மனதின் பதிவுகளும் வெளியே இழுக்கப்படும் அதைவெளியேவிடவும் முடியாமல், தக்கவைத்துக் கொள்ளவும் முடியாமல் துடிக்கும் போது அதை தோல்வியின் வலியாக உணருகிறோம். ஒரு பெண்ணின் உதவியுடன் தான் உருவாக்கிய மனப்பதிவுகளை இன்னொரு பெண்ணின் உதவி யோடு அதே போன்ற இன்னொரு பதிவினையும் உருவாக்கவும் முடியும் ஏனென்றால் எத்தனைப் பெண்களிடம் உணர்வுப் பூர்வமாக பழகினாலும் அந்த உணர்வுகள் உங்களின் இயல்பின் படியே, மன விருப்பின் படியே உங்கள் மனதில் படிகின்றது ஒரு சிறிதான தூண்டுதல் மட்டுமே பெண்களால் வருகிறது அதை பிரமாண்டப்படுத்தி உங்களில் காதல்சுவையை தருவதுஉங்கள் மனதிலுள்ள விருப்பஉணர்வே எனவே காதலில் நீங்கள் எதையும் இழந்துவிட முடியாது நீங்கள் இதுவரையிலும் பெற்றுக்கொண்ட இன்பங்கள் அனைத்தும் உங்களுக்கே சொந்தம் அதன் இன்ப உணர்வுகள் அனைத்தும் இன்னும் உங்களிடம் இருந்து கொண்டேதான் இருக்கின்றது எனவே இன்னும் கடந்தகால சினேகிதியின் நினைவில் வாழ வேண்டாம். இவை அனைத்தையும் எதிர்கால சினேகிதியால் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். உங்களுடையவள், உங்களுக்கானவள் என்ற உரிமையை வாங்கிக் கொண்டு யாரும் இந்த பூமியில் பிறப்பதில்லை அவளை உங்களில் பொருத்தினால்தான் உங்கள் உயிர இயங்கு மென்று உங்களுக்காக எந்த பெண்ணையும் உருவாக்கப்படவில்லை எந்த பெண் உங்கள் வாழ்வில் வந்தாலும் உங்கள் இன்பவாழ்வை மலரச்செய்ய முடியும் நீங்கள் யாரை நேசிக்கும் போதும் அந்த நேசம் எங்கிருந்து ஏற்படுகிறது, அதற்கு எதாவது குறிக்கோள் இருக்கிறதா, அது மனதில் எப்படிப்பட்ட உணர்வுகளை தோற்று விக்கிறது என்பதை பற்றி முன்கூட்டியே அனு மானிக்கும் உணர்வோடு யாரிடமும் பழக வேண்டும் அப்படி பழகினால் உங்கள் வாழ்வினில் ஏற்படும் எதிர்பாராத திருப்பங்கள் உங்களுக்கு எந்தவித தொல்லையும் கொடுக்காது.

நாமெல்லோருக்கும் இயற்கையிலேயே சில மன உணர்வுகள் உள்ளன சில வெற்றிகளின் போதும், பெருமைகளின் போதும் அந்த உணர்வுகளை நாம் புரிந்துகொள்ள முடியும் அந்தவகைப் பட்ட பல உணர்வுகள் நம்முள்ளே தேங்கி கிடக்கின்றன. அவைகளின் கூட்டு முயற்சிதான் காதலியை வானம் அளவிற்கு உயர்ந்தவளான ஒரு பிரம்மை யை தோற்றுவிக்கின்றது.

நமக்கு சொந்தமான நம் உணர்வுகளே நம் காதலை மகிழ்விக்கும் போது அதில் காதலியின் பங்கு சிறு அளவே ஆகும் அதை எந்த பெண்ணிடமிருந்தும் நாம் பெற்றுக்கொள்ள முடியும் அதற்கு சிறிய தெளிவு ஒன்று இருந்தாலே போதும் இந்த உண்மையை காதலில் தோல்வியை கண்டவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்

இன்னும் உங்கள் காதலின் காயம் ஆறவில்லையென்றால் கொஞ்ச நாள் காலத்தின் கையில் உங்களை விட்டு விடுங்கள் காலம் உங்கள் காயத்தை மாற்றிவிடும்.

இயற்கையிலேயே நம் மனதிலுள்ள நம்முடைய உணர்வுகள் தான் காதலை இயக்குகின்றது என்பதை புரிந்து கொண்டால் காதலின் வெற்றி எப்படி ஒரு மகிழ்ச்சியான அனுபவமோ அதே போல தோல்வியும் விரும்பத்தக்க ஒரு மகிழ்ச்சி யான அனுபவம் தான் என்பதை புரிந்து கொள்ள முடியும்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிற்கலை வரலாற்றிலே

# சிற்ப ஓவியச்சான்றாதாரங்கள்



கலையுணர்வு, கடவுளுணர்வை எழுப்ப ஒரு வாயிலாகக் கருதப்பட்டு, பண்டைத் தமிழ் மன்னர்களும் அதனை ஊக்கி வளர்த்து வந்தனர். கோயில்கள் இறைவன் உறைவிடங்களாக மட்டுமன்றி சிற்ப, ஓவியக் கலைகளின் சாட்சியாகவும் இருக்கின்றன. கலை வளர்ச்சியில் நமது வசதிக்காகவும், தெளிவுக்காகவும்:-

1. பல்லவருக்கு முற்பட்ட காலம்,
2. பல்லவர் காலம்
3. அதியமான் காலம்
4. சோழப் பெருமன்னர் காலம்
5. பாண்டியர் காலம்
6. விஜய நகர அரசர்களின் காலம்
7. நாயக்கர் காலம்

எனப் பாகுபடுத்தி நோக்கலாம். இக்காலங்களில் உருவாக்கப்பட்ட கலைச் செல்வங்களின் விளக்கங்களையும், சிறப்பம்சங்களையும் சுருக்கமாக நோக்கலாம்.

1.1. பல்லவருக்கு முற்பட்டகாலம்:
சங்ககாலத்திலும், அதற்குச்சற்றுப் பிற்பட்ட காலத்திலும் உருவாக்கப்பட்ட கலைக்கருவூலங்களும், கலைச்செல்வங்களும் தற்போது எஞ்சியிராவிடினும், அவற்றைப் பற்றிய செய்திகள் பத்துப்பாட்டு எட்டுத்தொகை, இரட்டைக் காப்பியங்கள் ஆகிய நூல்களில் பரவலாகக் காணக் கிடக்கின்றன. பண்டைக் காலத்தில் ஓவிய செந்நூல் இருந்ததாக மணிமேகலையும், கட்டடக் கலைநூல் இருந்ததாகச் சிலப்பதிகாரமும் சான்று பகருவதை நோக்குங்கால் சிற்ப நூலும் இருந்திருக்க வேண்டுமென்று கருத இடமுள்ளது.

சிற்பங்கள் செய்வதற்குக் கல், மண், மரம் ஆகியன பயன்படுத்தப்பட்டமை "வழுவறுமரனும் மண்ணும் கல்லும் எழுதிய பாவை...... (மணிமேகலை 21 : 115 - 116) என்னும் பகுதியால் தெரிய வருகிறது. பூம்புகாரின் ஒரு பகுதியாகிய மருதூர்ப் பாக்கத்திலும், காஞ்சி மாநகரிலும் " மரங்கொல் தச்சரும், மண்ணீட்டாளரும், செம்பு செய்ம், பைம் செய்நரும்" வாழ்ந்திருக்கின்றனர். பொதுவில் பல்லவர் காலத்திற்கு முற்பட்ட தமிழகத்தில் சைவ, வைணவ சமயத்தவர் கல்லினால் செய்யப்பட்ட திருவுருவங்களை வழிபடவில்லையெனவும், அதற்குப் பதிலாக மரம், சுதை முதலியவற்றினால் கடவுளரது திருவுருவங்களை உருவாக்கி வழிபட்டனரெனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். இவையன்றிக் கோயில்களில் இறைவனது வடிவம் ஓவியமாகவும் தீட்டப்பெற்று வழிபடப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. (K.R. Sirinivasn "Same aspects of Religion as revealed by early monuments & Literature of south" Journal of the Madras Univercity, vol.32 No.1, 1960, PP.141-142, கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு-மக்களும்பண்பாடும், ப. 150) முதலாவது மகேந்திர பல்லவனது மண்டப்பட்டுக் கல்வெட்டில் மரம், சுதை, செங்கள் முதலிய அழியக் கூடிய பொருள்களினாலன்றி, மும் மூர்த்திகளுக்கு அம்மன்னன் எளிதில் அழிவுறாத கல்லினால் குடவரைக் கோயில் எடுப்பித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதற்கு முன் கல்லினால் கோயில் கட்டப்படவில்லை என்று கூறுவர். தமிழ் மக்கள் கல்லை இறப்புடன் தொடர்பு படுத்தியமையால் மங்கலமான இறைத் திருவுருவங்களுக்கு முற்காலத்தில் கல்லினைப் பயன்படுத்தியது இல்லை. நடுகற்களும், கல்லறைகளுமே கற்களால் கட்டப்பட்டன. ஆனால் புத்த, சமண சமயத்தினர் தங்களுடைய சைத்தியங்களிலும், பள்ளிகளிலும் கற்களைப் பயன் படுத்தினரென்பது அனைவரும் அறிந்ததே. சங்க நூல்களில் கந்திற்பாவை, கொல்லிக் குடவரைத் தெய்வம் ஆகியவை பற்றிக் கூறப்பெற்றிருப்பினும், அவை கல்லினால் அமைக்கப்பட்டவை என உறுதியாகக் கூறுவதற்குரிய சான்றுகளில்லை. சிற்பங்களில் கல்லினால் செய்த இறைத் திருவுருவங்களை மட்டும் குறிப்பவையல்ல சுடுமண், சுதை, மரம், உலோகம் முதலிய பொருள்களால் செய்யப்பட்ட திருவுருவங்களும், சிற்பங்களும் அடங்கும்.

சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று கனக, விஜயர்களை வென்று கண்ணகிக்குச் சிலை நிறுவ இமயப் பெருவரையிலிருந்து கல் கொணர்ந்தான். அக்கல்லினை நன்னீராட்டி அதில் கண்ணகி உருவத்தைக் செதுக்கி, கோயில் ஒன்றில் நிறுவிப் பூப்பலி,காப்புக்கடை முதலியன செய்து விழாவெடுத்தான். கண்ணகி இறந்த பின்னர் அவளது கற்பின் பெருமையை உணர்த்துவதற்காக எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம் இதுவாகும். கோப்பெருஞ்சோழன் என்னும் மன்னன் வடக்கிலிருந்து உயிர் நீத்த பின் அவனது நினைவாக வீரக்கற்களான நடுகல் எடுத்தமையும் அறியமுடிகிறது. மண்ணுடன் சுண்ணத்தைக் கலந்து செய்யப்பட்ட உருவங்கள் சுதை உருவங்கள் எனப்படும். மண்ணீட்டு உருவங்களான இவற்றை செய்தவர்கள் மண்ணீட்டாளர் எனப் பெயர் பெற்றிருந்தனர். சுதை உருவங்களை ஆங்கிலத்தில் ( Stucco figures) என்பர். சுடுமண் பாவை (Tervacotta figure) களி மண்ணினால் வினையப்பட்டு, பின்னர் அவை நெருப்பிலிடப்பட்டு உறுதிபெற்ற உருவங்கள் சுடுமண் பாவைகள் எனப்படும். வண்டற்பாவை, மண் மான், புனைபாவை, வரிமணல் பாவை என்பனவும் உள்ளன. மரப்பாவை என்பதுமுண்டு. பாண்டியன் நெடுஞ்செழியன் அந்தப்புரத்திலுள்ள கட்டில் யானைத் தந்தங்களால் செய்யப்பட்டதும், அதன் கண் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய இலை வடிவங்களும் இடம் பெற்றிருந்ததும் நெடுநல்லாடையால் அறியலாம். உலோகத் திருமேனிகள் சங்ககாலத்தில் செய்யப்பட்டிருந்தன. பொன்னாற் செய்யப்பட்ட திருவுருவம் "பொன்புனைந்த பாவை" எனப்பட்டது. நன்னன் என்னும் மன்னன் குறித்த குறுந்தொகை (செய் 292-3,4) பாடலில் செய்தி உள்ளது. தமிழக வரலாற்றில் பல்லவர் காலத்திற்கு முன்னரே உலோகத் திருவுருவங்கள் செய்தமையைக் கழித்தொகை எடுத்துக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாதவனது கல்விக்கான ஏற்பாடுகள் அரசினால் மேற் கோள்ளப்பட்டன. அவனது தங்குமிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் அனைத்தும் அவனுடைய நண்பனின் உறவினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டன. ஊணர்வுகள் மரணித்தவனாக, சுடு புழுதி மணல் நிரப்பப்பட்டவன் போல் லண்டனில் மாதவன்! திவ்யாவைப் பிரிந்து கண்காணாத தொலை தூரத்திற்கு வந்தவனுக்கு வேதனைகளின் தாயகமாகவே லண்டன் மாநகரம் காட்சியளித்தது. எப்பொழுது லண்டன் நகரம் தூங்கும், நான் ஓ… வென்று கதறியழ வேண்டும் என்று தினம் தினம் காத்திருப்பான் மாதவன். சோகத்தின் சுகத்தைக்கூட சதிகார இறைவன் தட்டிப்பறித்து விட்டான்… எங்கே தூங்குகிறது, அந்த நகரம்தான் 24மணிநேரமும் கடிகாரம் போல் உழைத்துக் கொண்டல்லவா இருக்கின்றது. கம்பளிப் போர்வையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அதனுள் நுழையுமளவிற்கு ஜில்லென்ற குளிர். வாழ்க்கை வெறுத்தவனாய் முடங்கிப்போய் ஒருமூலையில் மூட்டையாக மாதவன். தினமும் வெளியில் சென்று சாப்பிடுவதற்கு போதுமான கையிருப்பும் இல்லை. அவனிடம் உள்ளதெல்லாம் திவ்யா தன் நகைகளை விற்றுக் கொடுத்த பணம் மட்டுமே…. உறக்கத்தை தொலைத்து விட்ட விதவை விழிகளைக் கண்ணீருக்கு மறுமணம் செய்து வைத்தது போலத்தான் இங்கு திவ்யாவும் தவித்துக்கொண்டிருந்தாள் காதலில் தவிப்புகளும், ஏக்கங்களும் ஆணைவிட பெண்ணிற்குத்தான் அதிகம் என்பார்கள். மாதவனுடன் பழகிய நினைவுகளை மீட்டியபடியே திவ்யாவும் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

குளிருக்கும், பசிக்கும், புது உலகிற்கும் அஞ்சி எத்தனை நாள்தான் ஒரே இடத்திலேயே கிடக்க முடியும். இப்படி முடங்கிப் போவதற்காகவா உயிரானவளையும் பிரிந்து இவ்வளவு தூரம் வந்துள்ளேன் என்பதைப் புரிந்து கொள்ள மாதவனுக்கு ஒன்றும் பெரியளவு கால அவகாசம் எடுக்கவில்லை! எழுந்தான் நடக்க ஆரம்பித்தான். அவனின் விதியை எழுதும் நவீன எழுத்தாணிகளாக கால்கள் புது முகவரியைப் போட்டுக்கொண்டன. வெளி உலகம் அவனது கண்ணிற்கு வெட்டைத்தரையாகவே தெரிந்தது. அவன் நடக்கின்றான், அவன் பார்க்கின்றான், அவன் அசைகின்றான் ஆனால் அவனைச் சுற்றிலும் எதுவும் அசையவில்லை திடீரென வாகனங்களின் பலத்த ஒலிச்சத்தங்களினால் பிரம்மை களைந்தவனாய் தான் நிற்பதொன்றும் கட்டாந்தரையல்ல லண்டன் நடுவீதியில் என்பதை உணர்ந்தான். அடுத்து என்ன செய்வதென்று தெரியாது திகைத்து நின்ற வேளை புயல் வேகத்தில் வந்த அந்த ஜீப் அவனைத் தூக்கிப் போட்டுக் கொண்டு பறந்தது…

இதைச் சற்றும் எதிர்பாராத மாதவன், ஜீப்புக்குள் இருந்த படியே "யார் நீங்க என்னை ஏன் கடத்திக்கொண்டு போறீங்க? எங்க கூட்டிட்டு போறாய்? நீ எதிர்பார்க்கிறளவுக்கு என்னிடம் காசு, பணம் எதுவுமே இல்ல, பிளீஸ் என்னை இறக்கி விடு எனக்கு இங்க எந்த இடமும் தெரியாது. தயவுசெய்து வண்டியை நிறுத்து" என்று பெரிய ஆர்ப்பாட்டமே போட்டான். அவனது எந்தக் கேள்விக்கும் பதில் கிடைக்கவில்லை. அதனால் மீண்டும் "என்னை இறக்காவிட்டால் காரைவிட்டுக் குதிச்சிடுவேன் தயவுசெய்து என்னை இறக்கிவிடு" என்றான். சொற்ப நிமிடங்களில் மாதவன் சப்த நாடிகளும் அடங்கி ஒடுங்கியவனாய் எந்த சத்தம் சஞ்சலமும் இல்லாமல் இருந்தான். அவனது இந்த திடீர் அமைதிக்கு காரணமாய் அமைந்தது அவன் வாயோடு வாய்வைத்துக் கொடுக்கப்பட்ட பிரெஞ்சு முத்தம் ஒன்றுதான். அப்போதுதான் தான் ஒருபெண்ணின் வண்டிக்குள் இருக்கிறேன் என்பதை மாதவன் உணர்ந்தான். சற்று நேரத்தில் மாதவன் இருந்த பக்கத்து கதவு திறக்கப்பட்டது. "மாதவன் வெளியவாங்க உங்க றூம் வந்திட்டது" என்று அவள் மாதவனது கையைப் பற்றினாள். "என்ன மாதவன் பார்க்கிறீங்க நான்தான் பிரியா உங்க றூமுக்கு பக்கத்து வீடு. அங்கிள் தான் உங்களை பாத்துக்கச் சொல்லி என்னட்ட சொன்னவர்" என்று சொல்லிக்கொண்டே மாதவனை மாடிக்கு அழைத்துச் சென்றாள் "வாங்க இது என்னோட வீடுதான், இருங்க வாறன்" என்றுவிட்டு ஹீட்டரை முடுக்கிவிட்டாள். இருந்தும் அவள் நடுநடுங்கிய படியே சென்றாள். அப்போதுதான் பிரியாவின் கம்பளி மேற்சட்டை குளிராதபடி தனக்குப் போர்த்தியிருப்பதை உணர்ந்தான். மயிர் கூச்செறியும் அந்தக் குளிரில் சூடாக ஒரு நெஸ்கபே குடிச்சால் நன்றாக இருக்கும் என்று மாதவன் நினைக்கும் போதே பிரியாவும் கையில் தேநீருடன் வந்தாள். தேநீர், காலை உணவு என அரைமணி நேரம் கழிந்தது. மாதவன் அருகில் போய் அமர்ந்த பிரியா "மாதவன் அப்பிடி என்னதான் நினைச்சுக்கொண்டு வந்தீங்க? தற்செயலா உங்களை நான் கண்டபடியா கூட்டிக்கொண்டு வந்திட்டன். ஏதாவது நடந்திருந்தா என்னாகிறது மாதவன்" இனி ஒரு தடைவ இப்படிப் பைத்தியக்காரத்தனமா நடந்துக்காதீங்க.

இந்த உலகம் ஒரு விசித்திரமானது. பல அனுபவங்களைக் கொடுக்கும். பூக்களை இரசிக்கும் மனதிற்கு சருகுகளையும் சகித்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு. உதாரணத்திற்கு என்னைப்பாருங்க அப்பா, அம்மா உறவு என்று யாரும் என்னருகில் இல்லை, ஆனா நான் என்னுடைய சொந்த முயற்சியால சொந்தமா ஒரு கம்பெனியை நிர்வகிக்கின்றேன். எனக்கெண்டு சொந்தமா ஒரு வீடு, கார் என்று சந்தோசமாக வாழ்கின்றேன். ஆனால்… என் சந்தோசத்தையும் சோகத்தையும் பகிர்ந்து கொள்ளத்தான் யாருமே இல்லை. அதைப்பற்றி நான் நினைக்கிறது கூட இல்லை. முடிந்தவரை நாமும் சந்தோசமாக வாழ்வதோடு மற்றவர்களை நோகடிக்காமல் வாழனும் என்று அவள் பேசிக்கொண்டிருந்ததில் ஒரு மணி நேரம் எப்படிக் கரைந்தது என்றே தெரியவில்லை. அவள் சொன்னதை எல்லாம் கேட்டுத் தலையாட்டியவன்.. "சொறி பிரியா என்னால உங்களுக்கு எவ்வளவோ கஸ்டம், ரொம்ப நன்றி. உங்க கோப்பியும் நல்லாயிருக்கு" என்று சொல்லிவிட்டு சென்றான். அங்கிருந்து மெதுவாக கிளம்பி தனது அறைக்குச் சென்றவன் மீண்டும் அறக்கப் பறக்க பிரியாவின் வீட்டுக்கு ஓடி வந்து "பிரியா என்ட றூம்ல ஒரு திங்ஸ்சும் இல்ல எதையும் காணல்ல என் பாஸ்போட், பணம், சர்டிபிகேட் எதையுமே காணோம் பிரியா" என்று பதைபதைத்தான். பிரியா அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள்.

காத்திருப்புக்கள் தொடரும்…



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# திருக்கோணேச்சரம்

திருக்கோணேச்சரம் (திருக்கோணேஸ்வரம்) இலங்கையில் திருகோணமலையில் உள்ள திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலமாகும். வருடா வருடம் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் விக்கிரகம் நகர்வலம் வருவதும் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலின் தீர்த்தம் பாவனாசம் என அழைக்கப் படுகின்றது. அதன் அர்த்தம் பாவங்களை கழுவித் தீர்க்க வல்லது.

**வரலாறு**

இது இலங்கையின் புகழ்பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. உலகில் உள்ள வழிபாட்டுத்தலங்களில் மிகப்பழமையான இவ்வாலயத்தை இலங்கையை ஆண்ட மனு மாணிக்கராஜா என்ற மன்னன் கி.மு. 1300ஆம் ஆண்டிற்கு முன்னர் இக்கோயிலைக் கட்டினான் என்று சான்றுகள் கூறுகின்றன.

**போர்த்துக்கேயர் கோவிலை அழித்தமை**

கி.பி. 1624 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயத் தளபதியாகவிருந்த கொன்ஸ்ரான் ரைண்டீசா கோயிலை இடித்து கோவிலில் இருந்த கல்வெட்டுப் பிரதியொன்றினை போர்த்துக்கேய மன்னனுக்கு அனுப்பி வைத்தான்.கோயிலின் மூல விக்கிரகம் நகர உலா சென்றபோது போர்த்துக்கேயர் கோவில் குருமார் போன்று வேடம் தரித்து கோயிலினுள் புகுந்து அதன் சொத்துக்களை கொள்ளையிட்டதுடன் கோயிலையும் அழித்தனர். அழிக்கப்பட கற்களைக் கொண்டு திருகோணமலைக் கோட்டையையும் கட்டினர். இந்தக்காலப்பகுதியில் பல பௌத்த இந்து ஆலயங்கள் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கோட்டை சுவரில் "முன்னே குளக்கோட்டன் ..." எனும் கல்வெட்டு காணப்படுவதும், கயல் சின்னம் (பாண்டியருடையது) பொறிக்கபெற்றிருப்பதும் இக்கோவிலின் தொன் பெருமையை உணர்த்தும்.

**கல்வெட்டு**

காலவோட்டத்தில் கல்வெட்டு சிதைந்த போதும் பலர் அக்கல்வெட்டினை பலர் வெற்றிடம் நிரப்பி புரிந்து கொள்ள முயற்சி செய்துள்ளனர். அவற்றில் ஒன்றே கீழ்க் காணுவது:

முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே
பூனைக்கண் புகைக்கண் செங்கண் ஆண்ட பின்
தானே வடுகாய் விடும்

இங்கு குளக்கோட்டன் என்பானே இக்கோவிலிற்கு திருப்பணி செய்தான் (திருத்தியமைத்தான்.) எனப்படுகிறது. குளமும் (கந்தளாய்க் குளம்), கோட்டமும் கட்டுவித்ததால் இயற்பெயர் மறைந்து குளக்கோட்டன் எனும் பெயர் வழங்குவதாயிற்று.

**ஆதி கோணேச்சரம்**

திருகோணமலையிலிருந்து கொழும்பு செல்லும் வழியில் தம்பலகாமம் எனும் தமிழ் கிராமம் உள்ளது. இங்கே ஆதி கோணேச்சரம் என ஒரு கோயில் உள்ளது. போர்த்துக்கேயர் திருகோணமலையில் ஆலயத்தை அழித்தபோது சில நலன் விரும்பிகள் சில விக்கிரகங்களை மறைத்து காப்பாற்றினர். அவ்வாறு காப்பாற்றப்பட்ட விக்கிரகமே பின்பு தம்பலகாமத்தில் பிரதிட்டைசெய்யப்பட்டது. ஆதிகோணேச்சரம் என்றறியப்படும் இக்கோவிலை தம்பலகாமத்தில் காணலாம்.

**மீள் கட்டுமானம்**

மீண்டும் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு சுமார் 450 வருடங்களின் பின்னர் 1952 ல் திருகோணமலையில் உள்ள பெரியார்களால் மீள கட்டுவிக்கப்பட்டது. முன்னைய கோயிலுடன் ஒப்பிடும் போது இப்போது இருக்கும் கோயில் மிகச்சிறியதே



**திருக்கோணமலை பதிகம்**

இது திருஞான சம்பந்தர் தன் ஞானக் கண்ணால் கோணமாமலையாரை கண்டு களித்து பாடியருளியது. சேதுவின்கண் செங்கண்மால் பூசைசெய்த சிவ பெருமானைப் பாடிப் பணிந்து போற்றி வாழ்ந்திருந்த காலத்தில், ஆழிபுடைசூழ்ந்து ஒலிக்கும் ஈழத்தில் மன்னு திருக்கோண மலையை மகிழ்ந்த செங்கண்மழவிடையாரை வணங்கிப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

**இதிலே,**

* "குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே" என்றும்
* "குடி தனை நெருக்கி பெருக்கமாய் தோன்றும் கோணமாமலை அமர்ந்தாரே" என்றும்
* "தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ் செம்பொனு மிப்பியுஞ் சுமந்து கொழித்து வன்றிரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமாமலை அமர்ந்தாரே" என்றும்
* "கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்றும்
* "விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வன்செருத்தி செண்பகத்தின் குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலை அமர்ந்தாரே" என்றும்
* "துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து தாழ்ந்துறு திரைபல மோதிக் குன்றுமொண் கானல் வாசம் வந்துலவுங் கோணமாமலை அமர்ந்தாரே " என்றும் கோவிலை போற்றி பாடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RT

# ரங்கீலாஸ் டெக்ஸ்டைல்ஸ்

*Specialist in wedding sarees, Shalwar Kameez & Readymade Garments*







இனிய புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

7/17, Orchard Shopping Complex. (Opp.Savoy Cinema)
Email: rangeelastex@gmail.com
Tel: 011 2599729

# சிகரம்

தொடர்ச்சி.......



இவரின் சேவைகளில் மற்றொன்றுதான் மலையக சிறார்களின் நலன் கருதி ஹட்டன் நகரில் 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மலையக அபிவிருத்தி மத்திய நிலையமாகும். இந்நிலையத்தில் முதலில் ஆங்கிலப் பாடம் இளைஞர்களுக்கும் முதியவர்களுக்குமாகச் கற்பிக்கப்பட்டது. ஆங்கிலப் பாடம் கணினி ஊடாகத் திறமையான முறையில் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்பட்டுவருகிறது. இதில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் 30% இலவசமாக ஏழைகளுக்காகவும், மற்றவர்களுக்கு ஹட்டன் நகரில் மற்றைய நிறுவனங்கள் அறவிடுவதைவிட மிகக் குறைவாகவும் அறவிடப்படுகிறது. பாடத்திட்டங்கள் அமெரிக்காவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தருவிக்கப்பட்டு ஒரு வயது முதல் கற்பிக்கப்படுகிறது. 8 வயதுக்கு மேற்பட்டவர்கள் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இதில் பங்கு கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மன்றத்தின் உதவியுடன் இப்பொழுது ஏழு பல்கலைக்கழக மாணவர்களும் மேலும் ஐந்து மாணவர்களும் நல்லுள்ளம் படைத்த கொடையாளிகள் மூலமும் கல்வி கற்று வருகிறார்கள். மன்றத்தின் மூலம் மத்திய மாகாண பாடசாலைகள் மூன்றிற்கு பேண்ட் வாத்திய கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலாக ஹாட்லி தமிழ் வித்தியாலயத்தைப் புதுப்பித்து கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு நல்ல கல்வி, கணினி அறிவு ஆகியவற்றை கற்பிப்பதோடு, பிள்ளைகளுக்கான விளையாட்டு திடலொன்று ஏற்படுத்தி விளையாட்டுப் பொருட்களையும், கணினி போன்றவற்றையும் பெற்றுக் கொடுத்தது. இந்திய வம்சாவளிகளான, சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத தோட்டப்புற மாணவர்களை ஊக்கு வித்து அவர்களுக்கு நல்ல கல்வி அறிவை ஊட்டுவித்து அவர்கள் யாருக்கும் இரண்டாம் தரம் இல்லை என்பதை நிருபிப்பதே மன்றத்தின் நோக்கமாகும். இப்படியான செயல்களினால்தான் மலையக இளைஞர்கள் மலையகத்திலிருந்து வெளியேறாமல் திறமையாக கல்வி கற்று தோட்டப்புற பகுதிகளில் நல்ல சேவை செய்து மலையகத்தை முன்னேற்றுவார்கள் என்பது எமது ஆழமான நம்பிக்கை என்பதை ஆணித்தரமாக எடுத்து கூறுகிறார்.

கடைசியில் தமது வேண்டுகோளாக நல்ல உள்ளம்படைத்தவர்களும், கல்விமான்களும், கனவான்களும் எம்முடன் இணைந்து ஒன்றாகக் கை கோர்த்து மலையகச் சிறார்களை மட்டுமன்றி மற்றவர்களையும் எம்மால் முடிந்தளவு வறுமைக் கோட்டிலிருந்து விலக்கி வாழ நாம் ஒரு வழிகாட்டியாக இருப்போம். மலையகத்தில் வாழ்கின்ற ஏழைத்தொழிலாளிகள் பாரம்பரிய இந்து கலாச்சாரத்தை பாதுகாத்து வருகிறார்கள். அதற்கான பாலமாக நாம் இருப்போம் இதற்கு பட்டக்கண்ணு தர்ம நிதி ஸ்தாபனம் என்றும் உங்களை அன்புடன் வரவேற்கின்றது.........

.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY DREAM VEHICLE



# 2013 Nissan Altima Sedan

## Pictures Looks Like a Mini Maxima

It is still not clear whether Nissan will soon reveal the next- generation Altima sedan at the New York Auto Show. However, yesterday some first official pictures have already spread on the internet along with its specs and pricing.

From the pictures, it is clearly seen that the new Altima brings a sleeker styling compared to that of the previous model. The new Altima that is based on the larger Maxima get a new interior design. However it looks less interesting than the design of its exterior.

The Vice President of Nissan, Brian Carolin stated that in developing the Altima, the company has took their most successful model and modify all of the aspect on that including the appearance, the feel, the driving experience and the technology that covers the headlights and windshield wipers.

The new Altima keeps the same wheelbase but with wider front and rear track. The fifth- generation Altima is empowered with the 2.5 liter QR25 four- cylinder unit that is good for 182 ponies and 180 lb- ft of torque. the second engine is the 3.5 liter V6 VQ35DE that produces the same 270 ponies and 258 lb- ft of peak of torque.

The Altima also get a revamped Xtronic CVT with new control logic and the larger gear ratio coverage that transmit the power to the front wheels.

The Altima 2.5 L/CVT is able to return fuel economy at 27 mpg city, 38 mpg highway and 31 mpg combined, while the 3.5 L V6/CVT Altima figures fuel efficiency at 22 mpg city, 30 mpg highway and 25 mpg combined.

The company also planning for a hybrid model later on that combines a compact- size CVT package with a single electric motor and two clutches with a new 2.5 liter supercharged gasoline engine with a lithium- ion battery stores the power.

For the base 4- cylinder model the 2013 Nissan Altima sedan is priced at $21,500. The price is increasing to $30,080 for the top V6 model.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காவடியாட்டம் என்பது முருக வழிபாட்டுடன் தொடர்புடைய ஒரு ஆட்டம் ஆகும். இந்த ஆட்டத்தில் ஆடுபவர் காவடி எனப்படும் பொருளைத் தோளில் வைத்துக்கொண்டு ஆடுவார். இலங்கையிலும், தமிழ் நாட்டிலும், தமிழர் வாழும் பிற நாடுகளிலும் உள்ள முருகன் கோயில்களில் வழிபாட்டின் ஒரு கூறாகக் காவடியாட்டம் இடம்பெறுகிறது. முருகன் கோவிலுக்குச் சென்று காவடி எடுப்பதாக பக்தர்கள் நேர்த்தி வைப்பது உண்டு. கோவில்களில் காவடி எடுப்பதில் இளவயதினரிலிருந்து பெரியவர் வரையிலான பலரும், பங்கேற்பர். வழிபாட்டின் கூறாகத் தோன்றிய காவடியாட்டம் பிற்காலத்தில் தொழில்முறை ஆட்டமாகவும் வளர்ச்சி பெற்றது. எனினும் வழிபாட்டுத் தொடர்பான காவடியாட்டம் அல்லது காவடியெடுத்தல் இன்னும் பரவலாகப் புழக்கத்தில் இருந்து வருகிறது. தொழில்முறைக் காவடியாட்டம் பொதுவாகக் கரகாட்டத்தின் ஒரு துணை ஆட்டமாக இடம் பெற்று வருகின்றது.

**சொற்பிறப்பு**

**முள்ளுக்காவடி, யேர்மனி ஆலயத்தில்**

கா அடி என்பது காவாகச் சுமக்கப்படும் "(முருகப்பெருமானின்) திருவடி. கா என்பது இருபுறமும் தொங்கும் சுமை. காவடியாட்டம்" என்பது "காவடி", "ஆட்டம்" என்னும் இரு சொற்களின் சேர்க்கையால் உருவானது. காவடி என்பது ஆட்டத்துக்கான கருவி என்பதால், இவ்வாட்டத்தின் பெயர் அதற்கான கருவியின் அடியாக எழுந்தது எனலாம். "காவடி" என்னும் சொல் "காவுதடி" என்பது மருவி உருவானதாகக் கருதப்படுகின்றது. சுமை காவுபவர்கள் இலகுவாகச் சுமப்பதற்காக, ஒரு நீண்ட தடியின் இரு முனைகளிலும் சுமைகளைத் தொங்கவிட்டு அத்தடியின் நடுப்பகுதி தோளில் இருக்குமாறு வைத்துச் சுமந்து செல்வர். காவுவதற்கான தடி என்னும் பொருள்பட இத் தடியைக் காவுதடி என அழைப்பர்.

**காவடியின் தோற்றம் குறித்த நம்பிக்கைகள்**

காவடியின் உண்மையான தோற்றம் குறித்த தகவல்கள் எதுவும் இல்லை எனினும், பல்வேறு சமயத் தொடர்புள்ள விடயங்களின் தோற்றங்கள் தொடர்பில் கதைகள் இருப்பது போலவே காவடியின் தோற்றம் குறித்தும் கதை ஒன்று உள்ளது. இதன்படி, அகத்திய முனிவரின் வேண்டுகோளுக்கு அமைய சூரபத்மனின் நண்பனும் முருக பக்தனுமான இடும்பன், சிவகிரி, சக்திகிரி என்னும் இரண்டு மலைகளைக் காவுதடியில் சுமந்து கொண்டு பொதிகைமலை நோக்கிச் சென்றானாம். சுமையை இறக்கி வைத்துவிட்டுப் பழநியில் இளைப்பாறிப் பின் மீண்டு தூக்க முயற்சித்தபோது தூக்க முடியவில்லையாம். அப்போது சிறுவனாக உருக்கொண்டு வந்த முருகப் பெருமான் மலைமேல் இருந்து இடும்பனைக் கேலி செய்யவே சிறுவனை நோக்கிப் பாய்ந்த இடும்பன் தவறி மலையில் இருந்து உருண்டு இறந்தான். பின்னர் அவனை உயிர்ப்பித்த முருகன், இடும்பனின் கோரிக்கைக்கு இணங்கி, இடும்பன் அங்கே காவல் தெய்வமாக இருக்கவும், கோயிலுக்கு காவுதடி (காவடி) எடுத்துவரும் பக்தர்களின் குறைகள் தீர்ந்துவிடவும் வரம் அளித்தாராம். அதிலிருந்து, முருக வழிபாட்டில் காவடி எடுத்தல் ஒரு அம்சமாக ஆகியது எனவும், அக்காவடியை கோவிலில் இடும்பன் சந்நிதியில் வைத்த பின்னரே எடுப்பது என்னும் வழக்கம் உருவானது என்றும் கூறப்படுகின்றது. இக் கதையில் இருந்து காவடிக்கும், காவுதடிக்கும் உள்ள தொடர்பு புலப்படுவதையும் கவனிக்கலாம்.

**காவடி**

காவடியாட்டத்திற்குப் பயன்படும் கருவியே காவடி எனப்படுகிறது. இது தொடக்கத்தில் சுமை சுமப்பதற்கான நீளமான ஒரு தடியையே (கோல்) குறித்தது. இதன் தொடர்ச்சியாகவே ஒரு நீளமான தடியின் இரண்டு முனைகளிலும், பால், தேன் அல்லது இளநீர் நிரப்பிய குடங்களைத் தொங்கவிட்டுக் காவடி எடுக்கும் வழக்கம் நிலவுகிறது. பூக்கள், வெட்டிவேர், பட்டுத்துணி, மயிலிறகு போன்றவற்றினால் காவடிகள் அழகூட்டப்படுகின்றன. தற்காலத்துக் காவடிகள் பல கூடிய அழகுணர்ச்சியுடன் உருவாக்கப்படுகின்றன. ஆனாலும் இதன் அடிப்படையான பகுதி ஒரு தடியே. இத் தடியின் இரு முனைகளையும் இணைக்கும் வகையில் மரத்தாலும், மெல்லிய பிரம்புகளினாலும் ஆன ஒரு வளைவான அமைப்பு இருக்கும். இதன் மேல் அழகான குஞ்சங்களுடன் கூடிய பட்டுத்துணி போர்த்தப்பட்டிருக்கும். நான்கு மூலைகளிலும் ஏராளமான மயில் இறகுகளைச் சேர்த்துக் கட்டி அழகூட்டியிருப்பர். வளைவுப் பகுதியின் உச்சியிலும் உயரமான கூம்பு வடிவான அலங்காரக் கூறு அமைந்திருக்கும். எனினும், காவடிகள் வேறுபட்ட அலங்காரங்களுடனும் அமைந்திருப்பது உண்டு. பொதுவான காவடி ஏறத்தாழ 3 அடிகள் அகலம் உள்ளதாக இருக்கும். தோளில் வைக்கும்போது இரண்டு பக்கங்களிலும் சற்றுக் கூடுதலாக இருக்கும்படி இது அமையும். இது 5 கிலோ தொடக்கம் 7 கிலோ வரை நிறை கொண்டதாக இருக்கும். ஆனால், சிறுவர்களும் காவடி எடுப்பது உண்டு ஆகையால் அவர்களுக்காக நிறை குறைவான சிறிய காவடிகளும் உருவாக்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா

Express Cinema

மகள் சௌந்தர்யா இயக்கத்தில் "கோச்சடையான்" படத்தில் நடிக்கும் ரஜினிகாந்த், அதையடுத்து கே.எஸ். ரவிகுமார் இயக்கத்தில் "ராணா" படத்தில் நடிப்பதாக இருந்தது. ஆனால் அந்தத் திட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அண்மையில் கே.வி. ஆனந்தை அழைத்த் ரஜினி, தனக்காக ஒரு ஸ்டைலிஷான கதையை உருவாக்க சொல்லி இருக்கிறார். இதையடுத்து தனது ஆஸ்தான கதை சொல்லிகளான இரட்டை எழுத்தாளர்கள் சுபாவிடம் ரஜினியின் மாஸ் ஹீரோயிசத்திற்கு ஏற்ப கதையை உருவாக்கும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார் கே.வி.ஆனந்த்.





"பில்லா" பார்ட்2 படத்துக்குப் பிறகு அஜித் நடிக்கும் படத்தில் நயன்தாரா நடிப்பதாக தகவல்கள் பரவின. விஷ்ணுவர்த்தன் இயக்குவதாகக் கூறப்படும் அந்தப் படத்தில் நடிக்க நயன்தாரா இதுவரை ஒப்புதல் தரவில்லை. "அஜித்துடன் நடிப்பதாக இருந்தால் நான் மொத்தமாக கால்ஷீட் தரமுடியாது. அஜித் அந்தப் படத்திற்கு எந்தெந்த நாள்களில் கால்ஷீட் கொடுத்துள்ளார் என்று கூறுங்கள். அதற்கு ஏற்ப என்னுடைய மற்ற வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு அந்த நாள்களில் கால்ஷீட் தருகிறேன்" என்று படக் குழுவினரிடம் நயன்தாரா கூறியிருக்கிறார்.



"சிவா மனசுல சக்தி", "பாஸ் என்கிற பாஸ்கரன்", "ஒரு கல் ஒரு கண்ணாடி" ஆகிய படங்களை இயக்கியுள்ள ராஜேஸ்.எம், அடுத்து கார்த்தியை வைத்து "ஆல் இன் ஆல் அழகுராஜா" என்ற முழு நீள காமெடிப் படத்தை இயக்குகிறார். டைட்டில் முடிவான பிறகு "வைதேகி காத்திருந்தாள்" படத்தில் நடித்த உண்மையான ஆல் இன் ஆல் அழகு ராஜாவான கவுண்டமணியை நேரில் சந்தித்து ஆசி பெற்றிருக்கிறார் கார்த்தி. அதோடு " நான் உங்கள் தீவிர ரசிகன் என்னுடன் சேர்ந்து ஒரு படத்தில் நீங்கள் நடிக்க வேண்டும்" என வேண்டுகோளையும் வைத்திருக்கிறார்.





"கோச்சடையான்" படத்தில் ரஜினிக்கு தங்கையாக நடிக்க முதலில் ஒப்பந்தமானவர் சினேகா. ஆனால் தற்போது அவரை நீக்கிவிட்டு "பொம்மலாட்டம்" "ஆனந்தத் தாண்டவம்" படங்களில் நடித்த ருக்மினியை ஒப்பந்தம் செய்துள்ளனர். தங்கை கதாபாத்திரத்துக்கு "சந்திரமுகியில் இடம் பெற்ற ரா...ரா... பாடல்" போல பரதம் கலந்த ஒரு நாட்டியப் பாடலில் ஆட வேண்டிய அவசியம். படப்பிடிப்பு தொடங்கவுள்ள சூழ்நிலையில் சிநேகாவுக்கு பரதம் கற்றுக்கொடுத்து ஆட வைப்பதெல்லாம் இயலாத காரியம் என்பதை உணர்ந்து கொண்ட இயக்குநர் சௌந்தர்யா, பரதம் உள்ளிட்ட நாட்டியத்தின் அனைத்துப் பிரிவுகளையும் கற்றுத் தேர்ந்து நடனப் பள்ளி நடத்தி வரும் ருக்மினியை இந்தக் கதாபாத்திரத்துக்குத் தேர்ந்தெடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினி BITES



செல்வராகவன் இயக்கத்தில் அனுஷ்காவுடன் "இரண்டாம் உலகம்" படத்தில் நடித்து வரும் ஆர்யா, தான் சந்திக்கும் நண்பர்களிடமெல்லாம் செல்வராகவனின் "ஃபிலிம் மேக்கிங்" உத்தியை வெகுவாகப் பாராட்டி வருகிறார். இந்தப் படத்தின் சில காட்சிகளுக்காக "சிக்ஸ் பேக்" உடலமைப்பு அவசியம் என செல்வா கூறியதையடுத்து கட்டுமஸ்தான தனது உடலைத் தீவிர உடற்பயிற்சி மூலம் மேலும் மெருகூட்டி வருகிறார் ஆர்யா.





கார்த்தி, ஜீவா ஆகியோருடன் நடிக்க மறுத்தார் த்ரிஷாவுடன் மோதல் என லட்சுமிராய் பற்றி பல தகவல்கள். இது பற்றிக் கேட்டால்..... கார்த்தி, ஜீவா ஆகியோர் படங்களில் நடிக்க அழைப்பு வந்ததும் அவற்றில் நடிக்க மறுத்ததும் உண்மைதான். ஆனால் அவர்களுடன் நடிக்க பிடிக்காமல்தான் அந்த வாய்ப்புகளை மறுத்தேன் என்பது பொய். அந்தப் படங்களில் எனக்கு முக்கியத்துவமே இல்லை. அதனால் நடிக்கவில்லை. "மங்காத்தா" படத்தில் நடிக்கும் போது எனக்கும் த்ரிஷாவுக்கும் மோதல் இருந்தது உண்மை. ஆனால் அதை நான் மறந்துவிட்டு த்ரிஷாவுடன் பொது நிகழ்ச்சிகளில் கூட கலந்து கொண்டிருக்கின்றேன். ஆனால் த்ரிஷாவின் அம்மாதான் பிரச்னையைப் பெரிதாக்கி என்னைப் பற்றிய வதந்திகளைப் பரப்புகிறார்" என்கிறார் லட்சுமிராய்.



ரேடியோ ஜாக்கி, வீடியோ ஜாக்கி என கலகலப்பூட்டிய சிவா, "சென்னை 28", "தமிழ்ப் படம்" உள்ளிட்ட படங்களின் மூலம் கவனம் ஈர்த்தார். கைவசம் நான்கு படங்களை வைத்திருக்கும் சிவா. அடுத்து இயக்குனர் அவதாரம் எடுக்கப் போகிறார். காதல், காமெடி கலந்து உருவாகும் இந்தப் படத்தை சத்யம் சினிமாஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்தின் நாயகனும் சிவாதான். படத்தின் டைட்டிலையும் ஹீரோயினையும் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.



அலெக்ஸ்பாண்டியனில் கார்த்தி

## கௌதம் மேனன் இயக்கத்தில் உதயநிதி

ஒரு கல் ஒரு கண்ணாடி படத்திற்குப் பின்பு நாயகன் உதயநிதி, கௌதம் மேனன் படத்தில் நடிக்கிறார். கொலிவூட்டில் ராஜேஷ் இயக்கியுள்ள 'ஒரு கல் ஒரு கண்ணாடி' படத்தில் உதயநிதி நாயகனாக ஹன்ஷிகாவுடன் இணைந்து நடித்துள்ளார். விரைவில் இப்படம் திரைக்கு வரவுள்ளது. படத்தில் நாயகி ஹன்ஷிகா உடன் இணைந்து நடித்தது பற்றியும், அடுத்து கௌதம் மேனனின் இயக்கத்தில் படம் பண்ணுவது பற்றியும் உதயநிதி பேசியுள்ளார். படத்தில் வரும் நகைச்சுவைக் காட்சிகளில் கஷ்டப்பட்டு நடித்துள்ளேன். நாயகி ஹன்ஷிகா உடன் இணைந்து காதல் காட்சிகளில் நடிக்கும்போது பதட்டமாக இருந்தது. சினிமாவில் எனக்கு சீனியரான ஹன்ஷிகா மொழியே தெரியாமல் இதில் நன்றாக நடித்துள்ளார். அவருடன் இணைந்து நடிப்பது எனக்குச் சவாலாக இருந்தது. ஒரு கல் ஒரு கண்ணாடி படத்தில் நாயகனாக நடித்த பிறகு, படங்களில் நடிக்க எனக்கு வாய்ப்புகள் வருகின்றன.கௌதம் மேனனோடு இணைந்து படம் பண்ண தயாராக உள்ளேன் என்று 'ஒரு கல் ஒரு கண்ணாடி' பட நாயகன் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.



## திருமணச் செலவுகளுக்காக மண்டபத்தை விற்றார் சினேகா



நடிகை சினேகா தனது திருமணச் செலவுக்காக பண்ருட்டியில் உள்ள தனது திருமண மண்டபத்தை விற்றுவிட்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது. அச்சமுண்டு அச்சமுண்டு படத்தில் நடித்ததன் மூலம் காதலர்களாக மாறியவர்கள் நடிகை சினேகாவும், நடிகர் பிரசன்னாவும். அவர்களின் திருமணம் வரும் மே மாதம் 11ம் திகதி சென்னையில் நடைபெறுகிறது. இந்நிலையில் அவர் தனது திருமணச் செலவுக்காகச் சொந்த ஊரான பண்ருட்டியில் உள்ள தனது திருமண மண்டபத்தை விற்றுவிட்டார் என்று கூறப்படுகின்றது. கடந்த சில நாட்களுக்கு முன்பு தான் மண்டபம் விற்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் சினேகா தரப்பில் இதுகுறித்து விளக்கம் அளிக்கப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LARGE FORMAT PRINTING



GUARANTEED HIGH RESOLUTION and AFFORDABLE PRINTS

அனைவருக்கும்
எமது
சித்திரை புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்




Shachin
Shachin Shachin Shach

shachinadvertising
services

we're different... in a good kind of way!

#73-1/1 | Manning Place | Wellawatte | Colombo-06 | Sri Lanka
t :: +94 11 2362536, 4367618
e :: info@shachinads.com

**Hotline : 0722-122795**

**www.shachinads.com**

CREATIVE TEAM · Quality Offset · Out Door · Ad on Wheels




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து? கொள்ளுங்கள்

## 'புற்றுநோயைத் தடுக்கும் ஆஸ்பிரின்' புதிய ஆய்வு



தினந்தோறும் சிறிதளவு ஆஸ்பிரினை உட்கொள்வதன் மூலம் புற்றுநோயைத் தடுக்க முடியும் என்பதுடன் பெரும்பாலும் குணப்படுத்தவும் கூட முடியும் என்று புதிய ஆய்வுகள் கூறுகின்றன. மருத்துவ சஞ்சிகையான த லான்சட் இல் வெளியாகியுள்ள ஆய்வுகள், ஆஸ்பிரின் மருந்தின் புற்றுநோய்க்கு எதிரான இயல்புகள் குறித்த புதிய நம்பிக்கையை அளித்துள்ளன. மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்காகப் பலர் தினந் தோறும் ஆஸ்பிரின் எடுத்துக்கொள்ளும் வழக்கம் உள்ளது. ஆனால், இந்த மருந்து புற்றுநோயையும் அதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளையும் தடுக்கக் கூடியது என்பதற்கான போதுமான ஆதாரங்கள் இல்லையெனவும், அதனால் வயிற்றில் இரத்தப்போக்கு போன்ற பக்கவிளைவுகள் அதிகரிக்கலாம் என்றும் ஏற்கனவே நிபுணர்கள் எச்சரித்தனர். 3-5 ஆண்டுகளில் முன்னேற்றம்

ஆனால் தற்போதைய புதிய ஆய்வை நடத்திய ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீட்டர் ரொத்வேல், ஆஸ்பிரினால் சில வகையான புற்றுநோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் குறைவு என்று முன்னரே தெரிவித்திருந்தார்.- 10 ஆண்டுகள் போன்ற நீண்டகாலப்போக்கிலேயே ஆஸ்பிரின் மருந்தினால் நல்ல பலன்களைக் காணமுடியும் என்றும் அப்போது கூறப்பட்டது. ஆனால் தற்போது 77 ஆயிரம் பேருக்கும் அதிகமான நோயாளிகளிடத்தில் நடத்தப்பட்ட 51 பரீட்சார்த்த ஆய்வுகளின்போது ஆஸ்பிரின் மருந்தினால் 3 இலிருந்து 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குள் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று பேராசியர் பீட்டர் ரொத்வேல் தலைமையிலான விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பல்வேறுபட்ட புற்றுநோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியங் களை ஆஸ்பிரின் குறைப்பது மட்டுமன்றி, புற்றுநோய்கள் உடலின் மற்ற பாகங்களுக்குப் பரவுவதையும் அதனால் தடுக்கமுடியும் என்றும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைப்பேர், உயிரிழந்தவர்கள் எத்தனைப்பேர் என்பதற்கும் அவர்களின் ஆஸ்பிரின் உபயோகத்துக்கும் இடையே தொடர்பு இருக்கின்ற மையே இந்த ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. 75 முதல் 300 மைக்ரோ கிராம் வரை தினந்தோறும் அஸ்பிரின் உட்கொண்டவர்களிடத்தில் நடத்திய ஆய்வில் புற்றுநோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 3 ஆண்டுகளுக்குப் பின்னர் கால்பங்களவு குறைந் திருந்தது. புற்றுநோயால் ஏற்படும் உயிரிழப்புகளும் 5 ஆண்டு காலப்போக்கில் 15 வீதத்தால் குறைந்திருப்ப தாகவும் அவ்வாறே ஐந்தாண்டுகளுக்குப் பின்னரும் அவர்கள் ஆஸ்பிரினை தொடர்ந்தும் எடுத்துக் கொண்டால் உயிரிழப்புகளின் வீதத்தை மேலும் 37 வீதத்தால் குறைக்க முடியும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் வயிற்றுக்குள் இரத்தக் கசிவுகள் ஏற்பட இந்த நீண்டநாள் ஆஸ்பிரின் பாவனை காரணமாவதாக சுட்டிக்காட்டப் படுகின்றமையையும் இங்கு கவனத்தில் கொண்டாகவேண்டும். எது எவ்வாறு இருப்பினும் ஆரோக்கியமான மனிதர்கள் புகைத்தலைக் கைவிடுதல், உடற்பயிற்சி செய்தல் போன்ற வழிமுறைகள் மூலம் புற்றுநோய் ஆபத்துக்களை இலகுவில் தடுத்துவிட முடியும் என்பதுதான் பேராசிரியர் ரொத்வேல் போன்றோர் அழுத்தமாகக் கூறுகின்ற விடயம்.

## விண் குப்பைகளை அகற்றுவதற்கான திட்டம்



வானத்தின் குப்பைகளை அள்ளுவதற்கு ஒரு திட்டத்தை சுவிட்சர்லாந்து அறிவித்துள்ளது. வானில் கைவிடப்பட்டுக் கிடக்கும் செய்மதிகள், ராக்கட்டுக்களின் பாகங்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கு ஒரு இயந்திரத்தை உருவாக்குவதுதான் இந்தத் திட்டமாகும். விண்வெளியைத் துப்பரவு செய்வதற்கான இந்த இயந்திரம் ஒரு வேக்கூம் கிளீனர் மாதிரி செயற்படும். வான் குப்பைகளை அள்ள வேக்கூம் கிளீனருடன் சுவிஸ் வருவது குறித்து நிச்சயமாக பல நகைச்சுவை கருத்துக்கள் வரலாம். ஆனால் இந்த விசயம் ஒன்றும் அவ்வளவு நகைச்சுவையான விடயம் அல்ல. இது மிகவும் முக்கியமான ஒரு விடயம். பல்லாயிரக் கணக்கான கைவிடப்பட்ட பொருட்கள் பூமியை சுற்றி வந்துகொண்டிருக்கிறன. சரியாக எவ்வளவு பொருட்கள் அவ்வாறு இருக்கின்றன என்று எவருக்கும் கணக்கு எதுவும் இதுவரை தெரியாது. இவற்றில் பழைய செய்மதிகள், சர்வதேச வெண்வெளி ஆய்வு கூடத்தில் இருந்து வீசப்பட்ட பொருட்கள், விண் ஓடங்கள் ஆகியவை அடங்கும். இவை ஒரு மணி நேரத்துக்கு இருபத்தெட்டாயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமான வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றன. இந்தக் குப்பைகளும், துண்டுகளும் பூமியைச் சுற்றவரும் செய்மதி களுக்கும், ஆட்கள் பயணிக்கும் விண் ஓடங்களுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தலாம். தற்போது இவற்றை அகற்றுவதற்காக லௌசானில் உள்ள ஈகோல் பொலிரெக்னிக்கில் உள்ள சுவிஸ் விண்வெளி மையம் ரிமோட் காண்ட்ரோல் மூலம் இயக்கக் கூடிய ஒரு இயந்திரத்தை அறிவித்திருக்கிறது. அந்த குப்பைகளை அங்கே நெருக்கியெடுத்து அவற்றைப் பூமிக்கு கொண்டுவரும் போதே எரியச் செய்வது ஒரு வழி. அல்லது அவற்றை அங்கிருந்து பூமிக்கு கொண்டு வந்து இங்கே அவற்றை எரிப்பது இரண்டாவது வழி. இவை இரண்டு குறித்தும் தாம் ஆராய்வதாக அந்த அமைப்புக் கூறியுள்ளது. பத்து மில்லியன் டொலர்கள் பெறுமதியான இந்த விண்வெளியைச் சுத்தம் செய்யும் திட்டம் இன்னமும் மூன்று முதல் ஐந்து வருடங்களில் ஆரம்பமாகும் என்று அந்த மையத்தின் இயக்குனர் வோல்க்கர் காஸ் கூறியுள்ளார்.

**அறிவியல்: இருண்ட பொருள் வரைபடம் தயார்**

அடுத்த இதழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலகின் மிகச்சிறிய சலவை இயந்திரம்



நம் ஆடைகளைச் சுத்தம் செய்வதை இலகுவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட சலவை இயந்திரம் தற்போது மிகச்சிறிய அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது பை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. 180 கிராம் நிறையை கொண்டுள்ள இந்த சலவைப்பையானது இடத்திற்கு இடம் எடுத்துச்செல்லமுடியும் என்பது விசேட அம்சமாகும். இதில் ஒரே தடவையில் 2 தொடக்கம் 3 லீட்டர் வரையிலான நீரை பயன்படுத்த முடிவதுடன் சம்போ, சலவை தூள்கள் போன்றனவற்றை பயன்படுத்தி 20-40 செக்கன்களில் சலவை செய்ய முடியும். இவை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் சந்தைப்படுத்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## நீண்ட காலம் உயிருடன் வாழ புதிய மாத்திரை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



20 ஆண்டுகள் கூடுதலாக உயிர் வாழ வைக்கும் மாத்திரையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மனிதர்களின் ஆயுளை நீண்ட காலமாக மாற்றும் ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். பாலூட்டி இனங்களில் உள்ள "சிர்ட்6" (எஸ்.ஐ.ஆர்.டி.6) என்ற மரபணு நோய்களை உருவாக்காமல் நீண்ட நாட்கள் வாழ வைக்க கூடியது என கண்டுபிடித்துள்ளனர். எனவே அந்த மரபணுவைத் தூண்டிச் செயற்பட வைக்கக் கூடிய புதிய மாத்திரையைக் கண்டு பிடித்து அதை எலிக்குச் செலுத்தினர். அதைத் தொடர்ந்து அந்த எலி 18 சதவீதம் அதிக நாட்கள் உயிர்வாழ்ந்தது. இதே முறையை மனிதர்களிடமும் பயன்படுத்த முடிவு செய்துள்ளனர். வயதாகும் காலத்துக்கு முன்பு அதாவது இளமையிலோ அல்லது நடுத்தர வயதாகும் போதோ இந்த மாத்திரையைப் பயன்படுத்துவதன் மூலம் 20 வருடங்கள் கூடுதலாக உயிர் வாழ முடியும் எனக் கணித்துள்ளனர். அதற்கான ஆய்வு மனிதர்களிடம் விரைவில் நடைபெற உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## உடம்பு சரியில்லையா ? உடனிருந்து ப்ளுடூத் கவனிக்கும்



கேமரா, படம் பார்ப்பது, கேம் ஆடுவது என பொழுதுபோக்காக மட்டுமின்றி, மருத்துவ ரீதியாகவும் ஸ்மார்ட் போன்கள் அதிகம் பயன் படுகின்றன. இதன் மருத்துவப் பயன்பாட்டை அதிகரிப்பது தொடர்பாக நியூசிலாந்தின் மனுகாவ் தொழில்நுட்பக் கழகத்தின் எலக்ட்ரிக்கல் என்ஜினியரிங் துறை ஆராய்ச்சியாளர்கள் ஹெலன் டிம் ராபர்ட்ஸ் ஆய்வு நடத்தி வருகின்றனர். அவர்கள் கூறியதாவது: இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவு ஆகியவற்றைத் தற்போது ஸ்மார்ட் போன்கள் மூலமாகவே தெரிந்துகொள்ள முடிகிறது. எக்ஸ்ரே, ஈசிஜிகூட வந்துவிட்டன. இந்நிலையில், ப்ளுடூத், வைஃபி வசதி, ஸ்மார்ட் போன் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மைக்ரோ கன்ட்ரோலர் அடிப்படையிலான வயர்லெஸ் சிஸ்டம் ஒன்றை உருவாக்கி இருக்கிறோம். இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை, இரத்தத்தில் சர்க்கரை அளவு ஆகியவற்றை ஸ்மார்ட் போன் தொடர்ச்சியாக கண்காணிக்கும். உடன் இணைக்கப்பட்டிருக்கும் ப்ளுடூத் மூலம் இதுபற்றிய தகவல் வைஃபி அல்லது இன்டர்நெட் இணைப்பு மூலமாக உங்களது டாக்டரின் ஸ்மார்ட் போனுக்கு உடனுக்குடன் அனுப்பப்படும். இருந்த இடத்தில் இருந்தே அவர் கண்காணிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இசைத்துறையில் பாரிய வளர்ச்சியை கண்டு கொண்டிருக்கும் இலங்கையில் தமிழ் இசைக் கலைஞர்களின் ஆதிக்கம் அன்று தொட்டு இன்று வரை பாரிய பங்களிப்பை செய்து உள்ளது. அந்த வகையில் தமிழ் இசைத்துறைக்குப் புதிதாய் கால் பதிக்கும் கூட்டணியைப் பற்றித்தான் நாம் இன்று பார்க்க உள்ளோம்.

Slim killa, Ruchran, T.L.K. என்ற இந்த மூன்று பேரின் கூட்டணிதான் இந்தக் குற்றப்பத்திரிகையை எழுதிக் கொண்டிருக்கிறது. "குற்றப்பத்திரிக்கை" என்ற வித்தியாசமான தலைப்பை வைக்க வித்தியாசமான காரணம் சொல்லுகின்றனர் இந்த மூவரும். ஒவ்வொரு இளைஞனும் தனது வாழ்க்கையில் காணும் ஒவ்வொரு உணர்வையும், ஒவ்வொரு பாடல்களாக்கலாம் என்ற கருத்தைச் சொல்கிறது இது. அதனால் தவறான பாதையை இளைஞன் தேர்ந்தெடுத்தால் அவனது வாழ்க்கை எதைப் பிரதிபலிக்கும் என்பதுதான் இந்தக் குற்றப்பத்திரிக்கையில் எழுதப்பட்டுள்ளதாகும்.

எப்படியான பாடல்களை இந்தக் குற்றப்பத்திரிக்கை கொண்டுள்ளது? hip hop பாடல்களை அடித்தளமாகக் கொண்ட இசைத் தொகுப்பு என்றாலும் எல்லாவிதமான பாடல்களையும் உள்ளடக்கியுள்ளது. கட்டாயமாக ஒரு பெரிய இரசிகர் வட்டத்தை உருவாக்குவோம் என்கின்றார்கள். இலங்கை இசைத்துறைக்குப் புதிய புரட்சியாகவும் அமையும் என்பதில் ஐயம் இல்லை எனறும் கூறுகின்றனர். அதே நேரம் தமிழ்ப் பாடல்கள் மட்டுமன்றி மூன்று சிங்களப் பாடல்களையும் இயற்றி உள்ளார்கள். இதன் முதற் கட்டமாக ஒரு பாடலுக்கான காணொளியை youtube ஊடாக வெளியிட்டும் உள்ளனர். "Kuttrapathirikkai" என்ற Link மூலமாக நீங்களும் பார்க்கக் கூடியதாக இருக்கும். மேலும் www.shakthi.fm என்ற இணையத்தளம் ஊடாகவும் மூன்று பாடல்களையும் வெளியிட்டுள்ளனர். மிகுந்த எதிர்பார்ப்புகளை உருவாக்க உள்ள Slim Killa வின் "குற்றப்பத்திரிக்கை" இசை இறுவெட்டிற்கு Global Express சார்பிலும் நேயர்கள் சார்பிலும் வாழ்த்துக்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kids KORNER



ஹாய் குட்டீஸ் ! இவ் அழகிய உருவத்தை அழகிய வெள்ளை தாளில் வரைந்து பொருத்தமான வர்ணம் தீட்டி அனுப்பி வையுங்கள்.

## குட்டிக்கதை



ஆ ! அய்யோ !

முன்னொரு காலத்தில் மிகப்பெரிய செல்வன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் கஞ்சன். வேலையாட்களை வருத்தி வேலை வாங்குவான். ஆனால் சம்பளம் கொடுக்காமல் ஏமாற்றுவான். செல்வன் மாதத் தொடக்கத்தில் வேலையாளை அமர்த்துவான். பெரியத் தொகையை சம்பளமாகக் கொடுப்பதாக சொல்லுவான். வேலையாள் மகிழ்ச்சியாக வேலையில் சேருவான். மாத இறுதி வரை கடுமையாக உழைப்பான். மாதக் கடைசி நாளன்று செல்வன் வேலையாளை அழைத்து கொஞ்சம் பணம் கொடுப்பான். "கடைக்குப் போய் "ஆ" "அய்யோ" வாங்கி வா வாங்கி வராவிட்டால் உனக்குச் சம்பளம் கிடைக்காது " என்பான். பணியாள் கடைத்தெருவுக்குச் சென்று எல்லாக் கடைகளிலும் விசாரிப்பான். "ஆ!" "அய்யோ!" கிடைக்காமல் திரும்பி வருவான். செல்வன் அவனுக்குச் சம்பளம் கொடுக்காமல் வீட்டுக்கு அனுப்பிவிடுவான். எந்த வேலையாளும் அந்த கருமியிடம் சம்பளம் வாங்கியதே இல்லை. இந்தச் செய்தியை அறிந்த ஓர் அறிவாளி கருமியிடம் சென்றான். அவனிடம் வேலைக்கு அமர்ந்தான். நாட்கள் சென்றன. மாதத்தின் கடைசி நாள் வந்தது. கருமி பணியாளை அழைத்தான். சிறு தொகையைக் கொடுத்தான். "கடைக்குப் போய் "ஆ" "அய்யோ" வாங்கி வா வாங்கி வராவிட்டால் உனக்குச் சம்பளம் கொடுக்கமாட்டேன்" என்றான். " சரி அய்யா! வாங்கி வருகிறேன் ஆனால் அவை விலையேறி விட்டன இன்னும் அதிகப் பணம் கொடுங்கள்" என்றான் பணியாள். கருமிக்கு ஒன்றும் புரியவில்லை அவற்றை எப்படி வாங்க முடியும் என்று நினைத்தான். அவன் கேட்டத் தொகையைக் கொடுத்தான். அவன் பணத்தோடு திரும்பி வரப்போகிறான் என்ற நம்பிக்கையோடு இருந்தான் செல்வன். பணியாள் கடைத்தெருவுக்குப் போய் இரண்டு சாடிகள் வாங்கினான ஒரு சாடியில் ஒரு பூரானைப் போட்டான் மற்றொன்றில் ஒரு தேளைப் போட்டுக்கொண்டு திரும்பி வந்தான். " அய்யா! இதோ நீங்கள் கேட்ட "ஆ" "அய்யோ" என்று கொடுத்தான் பணியாள். கருமி வியப்புடன் ஒரு சாடியை வாங்கி அதனுள் கையை விட்டான். தேள் கொட்டியது. வலி பொறுக்க முடியாமல் "ஆ" என்று கத்தினான் அவன். "பார்த்தீர்களா அய்யா! இதுதான் "ஆ" இதைப்பாருங்கள் இதில் "அய்யோ" உள்ளது" என்றான் வேலையாள். "வேண்டாம் வேண்டாம்" என்று கத்தினான் கருமி. வேலையாள் தன் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான். கருமி மனம் திருந்தி நல்லவன் ஆனான்.

## சிறுவர் பாடல்



### புதிய ஆத்திசூடி

அம்மா என்று சொல்
ஆளுமை வளர்
இலக்கை உயர்த்து
ஈன்றவள் மனம் குளிர்
உலகினை நேசி
ஊர் நலம் பேண்
எளிமை பயில்
ஏளனம் அகல்
ஐம்புலன் கல்
ஒற்றுமை பழகு
ஓங்கிய எண்ணம் கொள்
ஔவை சொல் கேள்
அ∴தே வாழ்க்கை..






குட்டீஸ் இந்தப்பூனைக்கு வழி காட்டுங்கள் பார்ப்போம்...



கதைகள், ஆக்கங்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள் போன்றவற்றை எமக்கு அனுப்பி வையுங்கள்...

" KIDS KORNER "
- Global Express -
Spice Global (Pvt) Ltd
No.48/3 B, 1/1, Dharmarama Road, Colombo-06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளித்தட்டு

கிளித்தட்டு அல்லது தாச்சி இலங்கையில் தமிழீழத்தில் பரவலாக விளையாடப்படும் விளையாட்டாகும். இது உடலுக்கு நல்ல பயன் தரும் விளையாட்டாகும். தோற்றம் வயல் நிலங்களில் விளையும் பயிரைக் கொத்திச் செல்ல வரும் கிளிகளை கூட்டமாய் நின்று உழவர் துரத்தும் வழமையினின்று கிளித்தட்டு தோன்றியது என்கிறார் தேவநேயப் பாவாணர்

**போட்டி விதிமுறைகள்**

மைதானத்தை முதலில் ஒரு போக்கு பெட்டிகளாக பிரித்து, பின்னர் நடுவே ஒரு கோடு போட்டு கொள்ளப்படும். படத்தை பார்க்கவும். எத்தனை ஒரு போக்கு பெட்டிகள் என்பது விளையாட்டு குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்தது. குறைந்தது ஒரு குழுவுக்கு 3 உறுப்பினர்களாவது வேண்டும். யார் நாணய சுண்டலில் தோற்கின்றார்களோ அவர்கள் மறிப்பார்கள், மற்ற குழு புகுவார்கள். மறிக்கும் அணியினர் முதலாம் கோட்டைத் தவிர மற்றக் கோடுகளில் நிற்பார்கள். மிகுதியான மறிக்கும் அணியை சேர்ந்தவர் கிளி என்று அழைக்கப்பட்டு, எந்த கோடுகளாலும் செல்ல வல்லவர். கிளியால் தொடப்பட்டால் புகும் குழு உறுப்பினர் ஆட்டமிழப்பார். முதலில் கிளி ஒரு தொங்கலிலும், புகுபவர்கள் ஒரு தொங்கலும் நிற்பார்கள். கிளி கூவிக்கொண்டு முன்னோக்கி வருவார். கிளி கூவியவுடன் புகுபவர்கள் உச்சி, தெண்டி அடுத்த எல்லைக்கு செல்ல முயல வேண்டும். தாண்டும் பொழுது மறிப்பவரால் தொடப்பட்டால் அக்குழு ஆட்டமிழப்பார். தாண்டும்போது மட்டுமே மறிப்பவர் தட்ட முடியும், சும்மா அருகில் நிற்கும் பொழுதோ, உச்சும் பொழுதோ தட்ட முடியாது. ஆனால், கிளி எங்கும் சென்று யாரையும் எப்பொழுதும் தட்டலாம். அதாவது, எட்டியும் தட்டலாம். உச்சி தப்பி எல்லைக்கு சென்றவர்கள் பழம் என்று கருதப்படுவர். வந்து கொண்டிப்பவர்கள் காய்கள். பழமானவர், மீண்டும் புகுந்த எல்லைக்கே சென்றால் தான் அந்த அணியினருக்கு ஒரு புள்ளி கிடைக்கும். ஆனால், மீண்டும் வரும் பொழுது, பழம் காய் உள்ள ஒரு எந்த அணி கூடிய புள்ளிகளைப் பெறுகின்றதோ அவர்களுக்கே வெற்றி. பலருடன் சேர்ந்து விளையாடும் பொழுது, இந்த விளையாட்டு மிகவும் வேகமாகவும், விறு விறுப்பாகவும் அமையும்.

வேறு பெயர்கள்

**கிளித்தட்டு**

குறிஞ்சி நிலத்தில் தட்டு என்பது பாத்தி. பாத்தியில் விளைந்த கதிர்களைத் தின்ன வரும் கிளிகளைத் தட்டி ஓட்டுவது போன்றதால் இதனைக் கிளித்தட்டு என்றர்.

**தண்ணீர் புரி**

வயல்களில் தண்ணீர் பாய்ச்சுவது போல இருப்பதால் இதனை மருதநில மக்கள் தண்ணீர் புரி என்பர்

**உப்பு விளையாட்டு**

கடல்நீர் உப்புப் பாத்தியில் பாய்வது போல இருப்பதால் நெய்தல்-நில மக்கள் இதனை உப்பு-விளையாட்டு என்பர்.

**போட்டி விதிமுறைகள்**

மைதானத்தை முதலில் ஒருபோக்குப் பெட்டிகளாகப் பிரித்து பின்னர் நடுவே ஒரு கோடு போட்டுப் பிரித்துக் கொள்ளவும். எத்தனை ஒரு போக்குப் பெட்டிகளென்பது விளையாட்டுக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. குறைந்தது ஒரு குழுவிற்கு 3 உறுப்பினர்களாவது வேண்டும். கூடியது 6 உறுப்பினர்கள் ஆகும்.

**மைதானத்தின் அளவு**

நீளம் 56 அடியாகவும் அகலம் 28 அடியாகவும் காணப்படும். கோடுகளின் அகலம் 1 அடியாகும். மூலைக் கோட்டின் நீளம் 4 பக்கங்களும் 6 அடிகளைக் கொண்டதாகும்.

யார் நாணயச் சுண்டுதலில் தோற்கின்றார்களோ அவர்கள் மறிப்பவர்கள் ஆவார்கள். மற்றைய குழு புகும் அணியினர். மறிக்கும் அணியினர் 1ம் கோட்டைத்தவிர ஏனைய கோடுகளில் நிற்பார்கள். மறிக்கும் அணியைச் சேர்ந்த ஒருவர் 'கிளி' என அழைக்கப்படுவார். இவர் ஆரம்பக்கோடு, நடுக்கோடு, பக்ககோடுகளிலும் இறுதிக் கோட்டிலும் செல்லும் உரிமை உடையவர். ஆனால் இறுதிக் கோட்டில் தரித்து நிற்க முடியாது. கிளியால் புகு குழு உறுப்பினர் ஒருவர் தொடப்பட்டால் அக்குழு ஆட்டமிழந்ததாகக் கருதப்பட்டு மறு குழு ஆட்டத்தை ஆரம்பிக்கும். இதே போல் மறிக்கும் குழு உறுப்பினர் ஒருவர் புகு குழு உறுப்பினர் ஒருவரைத் தாண்டிச் செல்லும் வேளையில் தொட்டாலும் மறு குழு ஆட்டத்தை ஆரம்பிக்கும். பழம், காய் உள்ள பெட்டிக்குள் போவது தவறாகும். இது காயும் பழமும் என்று சொல்லப்படும். இவ்வேளையிலும் ஆட்டம் இரத்தானதாகக் கருதப்படும். இதே வேளை காய் நிற்கும் பெட்டியின் மறுபாதியூடாக பழம் செல்லமுடியும். இவ்வேளையில் கிளி பூட்டுப்போட்டு தடுக்க முயல்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் துளிகள்

## தத்துவம்

காண்பதெல்லாம் இன்பமப்பா!
விதியென்னும் குழந்தை கையில்
உலகந்தன்னை
விளையாடக் கொடுத்துவிட்டாள்
இயற்கையன்னை – அது
விட்டெறியும் உருட்டிவிடும்
மனிதர் வாழ்வை
மேல் கீழாய்ப் புரட்டிவிடும்
வியந்திடாதே
மதியுண்டு கற்புடைய
மனைவியுண்டு
வலிமையுண்டு வெற்றி தரும்
வருந்திடாதே
எதிர்த்து வரும் துன்பத்தை
மிதிக்கும் தன்மை
எய்திவிட்டால் காண்பதெல்லாம்
இன்பமப்பா

## அன்பே

நான் உன்னை கவிதயாய்
வடிக்க நான் கவிஞன் அல்ல
பாடலால் பாடி மகிழ
பாடகனும் அல்ல
ஓவியத்தால் வரைய ஓவியனும்
அல்ல நித்தம்
உன்னை என் நெஞ்சில்
சுமக்கும் உன் அன்பே

## காதல் வலை

வலையில் சிக்கி
துள்ளி துடிக்கும்
மீன்களைப்பார்த்தேன்
நல்லவேளை
நான் சிக்கவில்லை
உன் காதல் வலையில்!

## அனுபவமே கடவுள்

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
'அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்' எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
'அனுபவம் என்பதே நான்தான்' என்றான்!

## ஒரு அணையப்போகும் மெழுகுவர்த்தி

பூவாக பொறந்திருந்தா
பூமியில எடமிருக்கும்
பொண்ணாக பொறந்ததால
போய் வாடி கன்னுக்குட்டி.

திண்ணையில எடுத்துவச்ச
கள்ளிபால குடிச்சுபுட்டு
சின்ன மூச்சே நின்னுபோடி.
சீக்கிரமா செத்துபோடி.

மூணுமணிநேரமுன்னே
பூமிக்கு வந்தவளே!
மூணுகிலோ! எடையிருக்க
மொடமின்றி பொறந்திருக்க.

மொகராசி பரவால்ல
மூக்குநுனியும் பரவால்ல
மகராசி நீ பொறந்த
நேரந்தான் நல்லால்ல

பொட்டக்கோழி பொறந்துச்சுன்னா–கூடை
போட்டு பொத்தி வப்போம்.

பொட்டமாடு பொறந்துச்சுன்னா
பொங்க வச்சு பூச வப்போம்.

வந்ததுமே போறதுக்கு
என்னவரம் வாங்கி வந்த?
பொல்லாத பூமிக்கு
பொம்பளயா ஏண்டி வந்த?

வேறேது கிரத்தில்
பொறந்திருக்க கூடாதா?
நம்ம வீட்டு நாயாக – நீ
இருந்திருக்க கூடாதா?

எறும்பாக புழுவாக
எதுவாக பொறந்தாலும்
நல்லாத்தான் பொளச்சிருப்ப
நாயாக இருந்தாலும்.

அடுத்தமுறை பூமி வந்தா
ஆம்பளயா வந்து சேரு.
அப்படியும் முடியலன்னா
ஆடுமாடா வரப்பாரு.

## நினைவுகள்

இன்று
நிஜத்தில் உன்னோடு வாழ்ந்த நாட்களை
விட்டுப்பிரியலாம்.
இனி
உன் நினைவுகளோடு வாழப்போகின்ற நாட்களை
என் மரணம்வரை யாரலும் பிரிக்கமுடியாது....

## நண்பனின் பிரிவு !

என் நிழலை விட
அதிகமாய் என்கூட
இருந்தாய்
எனக்காக என் இதயத்தை விட
அதிகமாய்
உதவி பண்ணினாய் !
இன்று
நீ இல்லாமல்
என் நிழல் கூட
என்னுடன் நிற்கவில்லை !

உங்கள் மனதில் தோன்றும்
எண்ணங்களைச் சிறந்த கவிகளாக்கி
எமக்கு அனுப்பிவையுங்கள்...

"கவிதைத் துளிகள்"
- Global Express -
Spice Global (Pvt) Ltd
No.48/3 B,1/1,Dharmarama Road,Colombo-06.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மலையக வரலாறு

இந்த நாட்டில் வாழுகின்ற மக்களில் இன்றும் தனிமைப் பட்டவர்களாக வாழ்பவர்கள் மலையக மக்களேயாவர். சுமார் 185 வருடங்கள் இந்நாட்டின் வளர்ச்சிற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இந்த மலையக மக்கள். 1827ம் ஆண்டு முதல் இந்தியாவிலிருந்து அடிமைத் தொழிலாளியாக அழைத்துவரப்பட்டவர்களே மலையகத் தொழிலாளிகளாவார்கள். இலங்கையை வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில்தான் இவர்கள் அழைத்து வரப்பட்டனர். மலையக மக்கள்? மலையகத் தொழிலாளர்கள் என்போர் யார்? என்ற கேள்விக்கு எத்தனை பேருக்குப் பதில் தெரியும்! இந்திய வம்சாவளியினர், இந்தியத் தமிழர்கள் என்று ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிட்டதொரு தொழிலாளர் சமுதாயம் மலைநாட்டார் என்றும் நாடற்றோர் என்றும் பின்னிலைப்படுத்திப் பல புல்லுருவிகளால் விமர்சிக்கப்பட்டு மலையகத் தமிழர்கள் என தற்போது அடையாளப் படுத்தும் இந்த மக்களின் கசப்பான வரலாற்றைத் தமிழர்களே மறந்து விட்டார்கள்.

இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தபோது 1844ம் ஆண்டு மத்திய மலைப்பகுதியில் தேயிலைத் தோட்டப் பயிர்செய்கைக்கென இந்தியாவிலிருந்து முதலில் 14 பேர் (கம்பளை என்ற இடத்திற்கு) அழைத்து வரப்பட்டனர். இதுவே இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் என்றரீதியில் உத்தியோக பூர்வமாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட முதல் தமிழர்களாவர். 1827ம் ஆண்டு முதல் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு மலையகப் பகுதிகளில் தோட்ட வேலைகள் செய்ததாக வரலாறு கூறுகின்றது. தமிழ்த் தொழிலாளர்கள் மலையகத்துக்கு தொழிலாளர் என்றரீதியில் 1844ம் ஆண்டுதான் கொண்டு வரப்பட்டனர் என்பதுதான் வரலாறு ஆகிறது. இருப்பினும் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு 1827ம் ஆண்டிலிருந்தே வெள்ளைக்காரர்களால் அழைத்து வரப்பட்டமையே உண்மையாகும்.

முதன் முதலில் கோப்பிப் பயிச் செய்கைதான் மலையகப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. கோப்பிப் பயிருக்கு ஏற்பட்ட நோய் காரணமாக அதை நிறுத்தித் தேயிலையைப் பயிரிடத் தொடங்கினார்கள். தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்பட்ட காரணத்தினால் ஏராளமான தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். 1827ம் ஆண்டு 10,000 மாக இருந்த தொழிலாளர்களின் தொகை 1877ம் ஆண்டு 1,45,000 ஆக அதிகரித்தது. இந்த வகையில் 1933ம் ஆண்டு வரை பல லட்சக்கணக்கான மக்கள் தொழிலாளர்களாக இங்கு வந்து சேர்ந்தனர். 1933ம் ஆண்டிற்குப் பின்னர் இந்திய அரசாங்கம் இலங்கைக்குத் தொழிலாளர்கள் அனுப்பப் படுவதைத் தடைசெய்தது.

இந்தியாவிலிருந்து கால்நடையாக இராமேஸ்வரம் வந்த மக்கள் பின்னர் கடல் மார்க்கமாகத் தலைமன்னாரை வந்தடைந்து அங்கிருந்தும் கால்நடையாகவே மலையகத்தை வந்தடைந்தனர். இவர்களை அழைத்து வருவதற்காக ஆங்கிலேயர் தலைமையாக ஒரு தரகரைப்பிடித்து கங்காணி என்ற பட்டத்தை கொடுத்தனர். அவர்களும் இந்தியாவிலிருந்து மக்களுக்கு ஆசை காட்டி இங்கு அழைத்து வந்தனர். இப்படிக் கால் நடையாக அழைத்து வரும் போது போதியளவு உணவு, சரியான சுகாதார வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகள் இல்லாமையாலும் பலமாதகாலமாகக் கால்நடையாக வந்ததால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், குழந்தைகளும் உயிரிழந்ததாகவும் அப்போதைய கதைகள் உண்டு. படிப்படியாகத் தோட்டங்கள் ஏராளமாக மலையகத்தில் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டு அங்கு தொழிலாளர்களை லயம் என்று சொல்லப்படுகின்ற குடியிருப்புகளில் குடியமர்த்தி தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்திக்கொண்டனர் ஆங்கிலேய துரைமார்.

பின்னர் ஒரு சிலர் மலையக மக்களின் துயர வாழ்விற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தொழிற் சங்கங்களை ஆரம்பித்தனர். 1931ம் ஆண்டு 1,00,000 (ஒரு இலட்சம்) மலையக மக்கள்வாக்குரிமை பெற்றிருந்தனர். அப்போது நடந்த தேர்தலில் மலையக மக்களின் முதற் தொழிற்சங்கத் தலைவரான மு.நடேசு ஐயர் தெரிவு செய்யப்பட்டார். அக்காலங்களில் புதுக்கோட்டை அரசமரபினர் வழிவந்த அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மலையக மக்களின் நலனுக்காக ஆரம்பத்திலிருந்தே குரல் கொடுத்து வந்தார். அவரோடு இணைந்து முஹம்மது அஸீஸ் என்ற தொழிற்சங்கத் தலைவரும் பலவகையிலும் எல்லாப் போராட்டங்களுக்கும் கைகொடுத்துத் தலைமைதந்தார். இப்படி இன்னும் பல தொழிற் சங்கங்கள் உருவாகி யிருந்தன. எத்தனை போராட்டங்கள் நடந்து வந்தாலும் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வு அடிமை வாழ்வாகத்தான் அமைந்திருந்தது. இப்படியான நிலையில் 1948ல் இலங்கையிலிருந்து பிரித்தானியர் வெளியேறியதும், மலையக மக்களின் வாழ்க்கை நிலையில் பிரஜாவுரிமை என்ற சட்டத்தினால் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டது. இலங்கைப் பாராளுமன்றத்தில் பல தமிழ் பிரதிநிதிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமை சட்டத்திற்கு அமைவாக தங்களது குடியுரிமைகளை நிரூபிக்க முடியாமல் போனமையால் மிகப் பெரும்பாலானவர்கள் இலங்கை அரசாங்கத்தால் நாடற்றோர் என்ற நிலமைக்குத் தள்ளப்பட்டனர். இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் அனைத்து மக்களும் பிரித்தானியர்கள் எனக் கொள்ளப்பட்ட போதிலும், சுதந்திரத்தின் பின்னர் இந்த மக்களுக்குத் தாம் இலங்கையர்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. அதாவது தமது தந்தைவழியில் அல்லது தாய்வழியில் இலங்கைப் பிரஜை என்பதை ஆதாரப் படுத்த வேண்டியிருந்தது.

போதியளவு கல்வித்தகைமை இல்லாததால் பிறப்புச்சான்றிதழ் உட்பட ஏனைய அத்தியாவசிய ஆவணங்களைப் பெறத்தவறிய அப்பாவி மக்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று கோரப்பட்டனர். இவர்களில் பலர் சிங்களப் பெயர் கொண்டிருந்தமையால் தப்பித்தனர் எனினும் அதிகமானோர் தாமாக மீண்டும் இந்தியாவுக்குச் சென்றனர். அடுத்து வந்த காலங்களில் இலங்கை அரசு இந்திய அரசுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் பெருமளவு மலையகத் தமிழரை இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப இலங்கை முயற்சித்தது. இவ்வாறான ஒப்பந்தங்களின் ஒன்றான சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மேற்படி தமிழர்களில் அரைப்பகுதியினருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதெனவும், ஏனையோரை இந்தியா ஏற்றுக் கொள்வதெனவும் முடிவானது. பல காரணங்களால் இது திட்டமிட்டப்படி நடைபெறாது போனது. மேலும் 1983ல் இலங்கையில் ஏற்பட்ட பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாகவும் பலர் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தனர். பெரும்பாலானோர் இலங்கையின் மலையகப் பகுதியிலேயே தங்கிவிட்டனர். 185 வருடங்களின் பின்னரும் இவர்கள் இந்திய வம்சாவளியினர் என்று அழைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் லயம் அறைகளிலியே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களின் நலன்களில் இந்தியத் தலைவர்களோ அல்லது இலங்கைத் தலைவர்களோ சரியான முடிவுகளை எடுக்காமல் இருப்பதனால்தான் நிரந்தரமான ஒரு தீர்வினைத் தரவில்லை என்பது நிதர்ஷனம். இன்னும் இந்திய வம்சாவளி என்று சொல்லிக் கொண்டிருப்பதானால் என்ன பயன்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் வைத்தியர் மற்றும் பல் நடுகை சிகிச்சை நிபுணர் வைத்தியர் துதிகரன் உடனான குளோபல் இதழின் நேர்காணல்



**கேள்வி :- பல் வைத்தியர் மூலம் நடைமுறைப் படுத்தப்படும் பல் நடுகை சிகிச்சை என்பது ஒரு புதிய முறையா? இதன் சரித்திரத்தைப் பற்றி கொஞ்சம் கூறுங்கள்**

வைத்தியர் :- பல் நடுகைச் சிகிச்சை அதாவது Tooth Implantation என்பது தற்போது நவீன முறையில் மேற்கொள்ளப்பட்டாலும் சில ஆயிரமாண்டுகளுக்கு முன்பிலிருந்தே இதற்கான எண்ணக்கரு விதைக்கப்பட்டு இருக்கிறது. எகிப்தின் பிரமிட்டுகளில் காணப்பட்ட மம்மிகளில் தங்கப் பற்கள் தாடை எழும்புகளுடன் பொறுத்தப்பட்டு இருந்தன . அது மட்டுமல்லாமல் கொலம்பியாவில் மனித எழும்புக் கூடுகளில் காட்சி அளிக்கும் பற்கள் விலை உயர்ந்த கற்களால் கட்டப்பட்டவையாக காணப்படுகின்றன. மத்திய கிழக்கு நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு சில எழும்புக் கூடுகளில் உள்ள பற்கள் யானைத் தந்தத்தை பயன்படுத்தி கட்டப்பட்டிருந்தன. ஆகவே பற்களை நிரந்தரமாக கட்டுவது ஒன்றும் புதிதான விடயம் அல்ல என நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்

நவீன காலத்தில் டைட்டேனியம் உலோகத்தை பாவித்து பல் கட்டுதல் முறையானது 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப் பட்டிருந்தாலும், 1980 களில்தான் அது மக்கள் பாவனைக்காக விடப்பட்டது. அன்றிலிருந்து டைட்டேனியம் உலோகத்தை பாவித்து நிரந்தர பல்கட்டும் முறை உருவாகி மிக வெகமாக வளர்ச்சி பெற்று வருகின்றது.

**கேள்வி :- இவ்வகையில் கட்டப்படும் பற்கள் சாதரணமாக எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் ?**

வைத்தியர் :- பல் கட்டும் முறையையும் நோயாளியின் உடல் நலத்தையும் பொறுத்து மாறுபடும். விஷேடமாக எலும்பின் தரம் நன்றாக உள்ள விடத்து வெகு காலம் நிலைத்திருக்கும். இன்றைய திகதியில் அதி கூடிய காலமாக இந்தப் பற்கள் நாற்பத்தேழு வருடங்கள் நிலைத்திருக்கின்றன. 47 வருடங்களின் பின்னரும் பல் விழவில்லை ஆனால் நோயாளி முதுமையின் காரணமாக இறந்துவிட்டார்.

**கேள்வி :- இச் சிகிச்சையை மேற்கொள்ள வயதெல்லை உள்ளதா?**

வைத்தியர் :- ஆம்.

சாதாரணமாக பதினெட்டு வயதிற்கு கீழ் பட்டோருக்கு இச் சிகிச்சை மேற்க்கொள்ளப் படுவதில்லை. அதிக பட்ச வயதாக நூறு வயதுடையவர்க்கு கூட பல் நடுகை சிகிச்சை மேற்கொள்ள முடியும். ஆகவே பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இச் சிகிச்சையை மேற்கொள்ளலாம். என்னுடைய அனுபவத்தில் அதி கூடிய வயதாக என்பத்திரண்டு வயதுடைய நோயாளிக்கு இந்த Implantation முறையில் பற்களைக் கட்டியுள்ளேன்.

**கேள்வி :- பல் நடுகைச் சிகிச்சையின் போது வலி ஏற்படுமா?**

வைத்தியர் :- இல்லை,

இதற்கான புதிய வழி முறைகளின் படியும், நவீன வைத்திய உபகரணங்களை பாவிப்பதனாலும் அசௌகரியங்களை குறைத்துக் கொள்ளலாம். வைத்திய சிகச்சையின் பின் ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டால் வைத்தியர் கொடுக்கும் மருந்து வகைகளினால் அவைகள் கட்டுப்படுத்தபபடும்

**கேள்வி :- பல் நடுகைச் சிகிச்சையின் பின் எப்போது நான் வேலைக்குச் செல்ல முடியும்?**

வைத்தியர் :- சிகிச்சை முடிந்த பின் வீடு செல்ல முடியும். அத்தோடு மறு நாளே நீங்கள் உங்கள் சாதாரண கடமைகளை மேற்க்கொள்ள முடியும்.



**கேள்வி :- பல் நடுகைச் சிகிச்சையின் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன?**

வைத்தியர் :-

- உங்களால் மீண்டும் அழகாகச் சிரிக்க முடியும்.
- முகத்தோற்றத்தில் ஒரு தெளிவு.
- முன்னேற்றமான அழகான தோற்றம்.
- பேசும்போது ஒரு புதுத்தெளிவு
- நன்றாக சாப்பிடுதல், அதிகமான உணவுகளைச் சுவைத்தல், நல்ல புத்துணர்ச்சி.
- வசீகரிக்கக்கூடிய போதுமான முகம்
- தன்னை நிலைநிருத்தத் தக்க வடிவம்

நேர்காணல் : சுரேந்த்

தொடர்புகளுக்கு :- **Friendly Dental Surgery**
**No.18, Hampton Lane**
**Colombo - 06**
**T.P.0777-356261 / 011-2366990**
**E.mail. drthuthik2000@yahoo.co.in**
**Web:- srilankan - implant - dentist. com**

**இது சம்பந்தமாக மேலதிக கேள்விகள் இருப்பின் வாசகர்கள் எமக்கு கேள்விகளை அனுப்பலாம் அல்லது வைத்தியருடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஓஷோவின் போதிதர்மன்

*தொடர்ச்சி.....*

போதிதர்மரின் காலில் விழுந்தார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. “நீதான் அதைச் சொன்னாய். நீதான் என் வாரிசாக இருக்கப் போகிறாய்“ என்று போதிதர்மர் சொன்னார். ஆனால் அன்றிரவு தன்னைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பதால் பழிவாங்கும் நோக்கத்தோடு சில சீடர்கள் போதிதர்மருக்கு விஷம் கொடுத்தனர். எனவே அவர்கள் அவரைப் புதைத்து விட்டனர். அதைவிட வினோதமான கதை மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் தனது கைத்தடியில் ஒரு செருப்பைத் தொங்கவிட்டபடி இமயமலையை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்ததை ஒரு அரசாங்க அதிகாரி பார்த்தார் என்பதாகும். அவர் வெறும் காலில் நடந்து சென்றதாக கூறினார். அந்த அதிகாரி அவருக்கு பழக்கமானவராவார். பலமுறை அவரைச் சந்தித்திருக்கிறார். அதிக ஈடுபாடு இல்லாவிட்டாலும் அவர் மீது அன்பு வைத்திருந்தார். “இந்தச் செருப்புக்கு என்ன அர்த்தம்? ஒரு செருப்பை மட்டும் ஏன் தொங்க விட்டிருக்கிறீர்கள்? என்று அவர் கேட்டார். “சீக்கிரமே நீ தெரிந்துகொள்வாய். எனது சீடர்களை சந்தித்தால் நான் நிரந்தரமாக இமயமலையில் தங்கப் போவதாகச் சொல்லுங்கள்“ என்று போதிதர்மர் சொன்னார். அந்த அதிகாரி முடிந்த வரை விரைவாக போதிதர்மர் வாழ்ந்த மடம் உள்ள மலைக்குச் சென்றார். அவருக்கு விஷம் கொடுத்து புதைக்கப்பட்டதாக அங்கு இருந்தவர்கள் சொன்னார்கள்... அங்கு ஒரு கல்லறையும் கட்டியிருந்தார்கள். அந்த அதிகாரி எல்லையில் பணியிலிருந்ததால் அவர் அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவில்லை. “அடக்கடவுளே, நான் அவரைப் பார்த்தேன். நான் பார்த்தது பொய் இல்லை. நான் பலமுறை அவரை பார்த்திருப்பதால் எனக்கு அவரை நன்றாகத் தெரியும். அதே கோபமான கண்கள், அதே காட்டுத்தனமான தோற்றம். அதற்கும் மேலாக, அவர் தன் கைத்தடியில் ஒற்றைச் செருப்பை மாட்டியிருந்தார்“ என்று அவர் சொன்னார். சீடர்களால் ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை. அவர்கள் அந்தக் கல்லறையைத் திறந்தனர். அங்கே இருந்தது ஒரேயொரு செருப்பு மட்டுமே. அப்போது அந்த அதிகாரி. “சீக்கிரமே தெரிந்துகொள்வாய்“ என்று போதிதர்மர் சொன்னதைப் புரிந்துகொண்டார். ஏசுநாதர் உயிர்த்தெழுந்தது பற்றி நாம் அதிகம் கேள்விப்பட்டிருக்கிறோம். போதிதர்மர் உயிர்த்தெழுந்தது பற்றி யாருமே பேசவில்லை. ஒருவேளை அவர்கள் புதைத்தபோது அவர் கோமாவில் இருந்திருக்க வேண்டும். அவர் சுயஉணர்வை அடைந்த போது கல்லறையிலிருந்து வெளியேறிவிட்டார். ஒரு செருப்பை கல்லறையில் விட்டுவிட்டு ஒரு செருப்பை கைத்தடியில் மாட்டிக் கொண்டார். திட்டமிட்டபடியே அவர் அங்கிருந்து வெளியேறிவிட்டார். அவர் இமயமலையின் எல்லையில்லாத பனிக்குவியலில் இறக்க விரும்பினார். அங்கு அவருக்கான கல்லறையோ, ஆலயமோ, சிலையோ இருக்கக் கூடாது என்று அவர் விரும்பினார். அவர் மக்கள் வணங்குவதற்காகப் பாதச் சுவடுகளை விட்டுச் செல்ல விரும்பவில்லை. அவர் மீது அன்பு செலுத்துபவர்கள் தங்களது சுய ஆன்மாவில் இருக்க வேண்டும். “என்னை யாரும் வணங்கக் கூடாது“ என்று விரும்பினார். சொல்லப்போனால் அவர் மாயமாக மறைந்து விட்டார். அவருக்கு என்ன ஆனது, எப்படி இறந்தார் என்பது பற்றி யாருமே கேள்விப்படவில்லை. அவர் இமயமலையின் எல்லையற்ற பனிக்குவியலில் புதைபட்டிருக்க வேண்டும். இதுதான் அவர். நம்மிடம் புத்தகம் என்று கூறக்கூடிய மூன்று சிறிய தொகுப்புகளே உள்ளன. அவை அவரது எழுத்துக்கள் அல்ல. ஏனென்றால் அவை அவரது தன்மையை காட்டவில்லை. அவை அவரது சீடர்களாக இருந்த அறிஞர்களால் விட்டுச் செல்லப்பட்ட குறிப்புக்கள். எனவே அவை அடிப்படையில், முக்கியமான தவறுகளையும், தவறான கருத்துக்களையும், தவறான பொருள்களையும் தரக்கூடியவையாக உள்ளன. அவர்கள் மனம் இல்லாதவர்கள் அல்ல. அவர்களது மனங்களே குறிப்புகளை எடுக்கின்றன. அவர்களது மனங்களே வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கின்றன. போதிதர்மர் வார்த்தைகளைச் சொல்லும் மனிதனாக இல்லாமல் செயலைச் செய்யும் மனிதனாக இருந்தார். அவர் ஒரு புத்தகம் எழுத வாய்ப்பே இல்லை. தன்னை வணங்கக் கூடாது என்ற கருத்துக்கொண்ட, தன்னை பின்தொடர பாதச் சுவடுகளை விட்டுச் செல்ல விரும்பாத மனிதன் புத்தகத்தையும் எழுதப் போவதில்லை. ஏனெனில் அது அவர் தன்னைப் பின்பற்றப் பாதச் சுவடுகளை விட்டுச் செல்வதற்கு சமமாக ஆகிவிடும். ஆனால் நான் அவற்றைப் பற்றிப் பேசுவதைத் தேர்ந்தெடுத்தேன். ஏனென்றால் இந்த மூன்று தொகுப்புக்களும் போதி தர்மரால் எழுதப்பட்டவை என்று பல நூற்றாண்டுகளாக நம்பப்பட்டு வந்ததே ஆகும். அவற்றில் மற்றவர்கள் விட்டுச் சென்ற குறிப்புகளே இங்கும் அங்குமாக போதிதர்மர் பற்றி சொல்கின்றன. ஏதோ குறிக்கப் பட்டுள்ளது. இதில் எது போதிதர்மரின் வார்த்தைகள், எது குறிப்பெடுத்தவரின் வார்த்தைகள் என்பதைக் கண்டுபிடிப்பது எந்தவொரு அறிஞருக்கும் கடினமானதே. எனது அனுபவத்தின் மூலமாக எது போதிதர்மரின் வார்த்தைகளாக இருக்க முடியும், எது அறிஞர்களால் புரிந்துகொள்ளப்பட்ட வார்த்தைகளாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். எனவே இவை வெறும் சாதாரண கருத்துக்கள் அல்ல. இதனைப் பதரிலிருந்து நெல்லைப் பிரித்தெடுப்பது போன்று போதிதர்மரின் கருத்துக்களைப் பிரித்தெடுக்கும் முதல் முயற்சி ஆகும்.

ஆதாரம் – “போதிதர்மர்
– மாபெரும்
ஜென் குரு“
– ஓஷோ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலவசமானது தரமானது வாசிக்க இனிமையானது

2012 ஆம் ஆண்டில் பிறக்கும் தமிழ் சிங்களப் புத்தாண்டு அனைவரும் காலந்தொட்டு கொண்டாடி வரும் ஒரு விஷேட தினமாகும். ஆகவே, இப்புது வருடத்தில் செய்யப்பெறும் அனைத்துச் செயல்களும் சிறப்பாக அமைய வேண்டும் எனவும் எல்லோருக்கும் நலமாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நந்தன என்று சொல்லும் போதே ஒரு வாசைன வருவது போல எம் மத்தியில் உள்ள துன்பங்கள் துயரங்கள் நீங்கி, நிம்மதியாய் சந்தோஷமும் எல்லோர் வாழ்விலும் உண்டாக வேண்டும் என்று

ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நமது சுமைகள் அகன்றிட வேண்டும் என்று ஒவ்வொரு வருடமும் நாம் கடவுளை மன்றாடி நின்றாலும் எம் மத்தியில் பல பிரச்சினைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. ஆகவே எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளவும் எம் சந்ததியினர் நிம்மதியாக வாழவும் எம் எண்ணங்களையும் செயல்களையும் சரியான முறையில் கொண்டு செல்ல எம் காலடியை இப் புதுவருடத்திலாவது முன்னெடுத்து வைப்பது எமது கடமை.

நாம் ஒவ்வொருவரும் நல்லதைச் செய்வோம். நல்லதே நடக்கும் என்று இறைவனைப் பிரார்த்திக் கொண்டு மீண்டும் எனது வாழ்த்துக்களை இவ்வினிய புத்தாண்டில் தெரிவித்துக்கொள்கின்றோம்

- எக்ஸ்பிரஸ் குழு -


DISCOUNT
This coupon Valid till 30th April
5 % BOOKING ONLY
AKSHAYAA HALL
No.22, 37 Lane, Wellawate. Colombo-06. (Opposite Wellawatte Arpico)
* Condition Apply

DISCOUNT
25 % For Purchase
KALYANI TEXTILE
479, Galle Road, Wellawatta, Colombo-06. Sri Lanka.
* Condition Apply

DISCOUNT
20 % For Purchase
Mano Bran Enterprises
No. 310, 1/2B, Galle Road, Wellawatta, Colombo-06.
* Condition Apply

DISCOUNT
SPECIAL DISCOUNT
TOP-SIGN ADVERTISING & PRINTING SERVICE
NO.335, 1/1, GALLE ROAD, WELLAWATTA, COLOMBO-06.
* Condition Apply

DISCOUNT
SPECIAL DISCOUNT
Kumar Video Digital Vision
No.61/6 Maura Place, Havlock Road, Colombo 06
* Condition Apply

DISCOUNT
35 % Bring this coupon to claim your offer
AMBIKA'S
1E, Orchard Shopping Complex, (opp.Savoy) Sinsapa Road, Wellawatte, Colombo-06.
* Condition Apply





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DISCOUNT COUPON
global express
we strive for your success!
* Condition Apply

DISCOUNT COUPON
global express
we strive for your success!
* Condition Apply

DISCOUNT COUPON
global express
we strive for your success!
* Condition Apply

DISCOUNT COUPON
global express
we strive for your success!
* Condition Apply

DISCOUNT COUPON
global express
we strive for your success!
* Condition Apply

DISCOUNT COUPON
global express
we strive for your success!
* Condition Apply

# திரும்பிப் பார்க்கின்றோம்






கடந்த 08-03-2012 அன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற மகளிர் தின வைபவத்தில் திரு.லயன்.S.குகவரதன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள்......



கடந்த மாதம் வெற்றி TV வெற்றி FM தனது உத்தியோபூர்வ செய்தி இணையத்தளமாக www.vettrinews.lk என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

global express
we strive for your success!

# BUDGET PAGE














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விம்பங்கள்



## அலெக்சாண்டர் கிரகாம் பெல்

**1847 - 1922**

தற்போதைய காலகட்டத்தில் தொலை பேசியை போன்று வேறெந்த கண்டு பிடிப்பும் மிக பரந்த அளவில் நம்முடைய அன்றாட வாழ்வில் பெரும் பங்களிப்பை ஏற்படுத்தவில்லை.

இப்படிப்பட்ட மக்களின் வாழ்வில் பெரும் பங்கை வகிக்கும் தொலை பேசியைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகாம் பெல் 1847ம் ஆண்டு ஸ்கொட்லாந்திலுள்ள எடின்பரோ என்ற இடத்தில் பிறந்தார்.

இவர் சில ஆண்டுகள் மாத்திரமே முறையான பாடசாலைக் கல்வியைப் பயின்றார். பின் இவர் குடும்பத்தினரே இவருக்கு கல்வி கற்பித்தனர். அதன் பிறகு இவர் தாமாகவே உயர் கல்வியைக் கற்றுக் கொண்டார்.

முக்கிய விடயம் என்னவென்றால் இவர் தந்தை குரல் உறுப்பு பயிற்சிமற்றும் பேச்சு திருத்த முறை போன்றவற்றில் செவிடர்களுக்குக் கல்விகற்பிப்பதில் வல்லுநராகத் திகழ்ந்தார். இதனால் குரல் ஒலிகளை மீண்டும் உருவாக்கிக் காட்டுவதில் இவருக்கு இயல்பாகவே ஆர்வம் எழுந்தது.

மேலும் இவர் 1871ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள மசாசுசெட் என்ற மாநிலத்தில் இருக்கும் பொஸ்டன் நகரில் குடியேறினார்.

1875ம் ஆண்டு தொலைபேசியைக் கண்டு பிடிப்பதற்கான ஆரம்ப முயற்சியில் இறங்கினார். 1876ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தன்னுடைய கண்டு பிடிப்புக்கான புத்தாக்க உரிமைக்காக விண்ணப்பித்தார் மேலும் (அதே நாளில்) சிலமணி நேரத்துக்குப்பின் எலிஹாகிரே என்பவரும் இதே போன்ற ஒரு கண்டுபிடிப்புக்காகப் புத்தாக்க உரிமை கோரி விண்ணப்பித்தது குறிப்பிடத்தக்கது. அதற்குச் சில வாரங்களுக்குப்பின் இந்த புத்தாக்க உரிமை பெல்லுக்கு வழங்கப் பட்டது.

இவருக்கு அந்த உரிமை வழங்கப்பட்டதும் வெகு விரைவிலேயே கண்டு பிடித்த தொலைபேசியை பிலடெல்பியாவில் நடைபெற்ற நூற்றாண்டு கண்காட்சியில் காட்சிக்கு வைத்து பரிசும் பெற்றார்.

1877ம் ஆண்டு ஜூலை மாதம் பெல்லும் அவரது நண்பர்களும் இணைந்து ஒரு தொலைபேசி நிறுவனத்தை ஆரம்பித்தனர் இவருடைய தொலைபேசி இதனால் வணிக முறையில் அமோக வரவேற்பைப் பெற்றது. (இந்த நிறுவனம்தான் இன்றைய "அமெரிக்க டெலிபோன் மற்றும் டெலிகிரா.ஃ.ப்" நிறுவனத்தின் மூதாதையாகும்.)

இதை மட்டுமன்றி மக்களுக்குப் பயன்படும் வேறு சில பயனுள்ள கண்டு பிடிப்புகளையும் கண்டு பிடித்துள்ளார். இவர் பல துறைகளில் கண்டு பிடிப்புகளில் ஈடுபட்டாலும் முக்கியமாகக் காது கேளாதவர்களுக்கு உதவி புரிவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஏன் என்றால் இவருடைய மனைவியும் ஒரு காது கேளாதவர்தான். அதனால் தன் மனைவிக்கும் இவரே கல்வி கற்பித்தார்.

இவர்களுக்கு இரு புதல்வர்களும், இரு புதல்வியரும் பிறந்தனர். ஆனால் இரு புதல்வர்களும் குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டனர்.

கிரகாம் பெல் 1882 ம் ஆண்டு அமெரிக்க குடியுரிமையைப் பெற்றார். அவர் 1922 ம் ஆண்டு அமெரிக்காவில் காலமானார்.



alexander graham bell first telephone





ஆக்கம். R.S. கேதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org